Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 45

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

19 ஸஃபர் 1439 ஹிஜ்ரி கமரி 9 நுபுவ்வத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

9 நவம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஒரு காலம் இருந்தது. அப்போது வாழ்விற்குத் தேவையான காரணிகள் நம்மை விட்டும் பிரிந்து சென்று விட்ட காரணத்தால் ஐந்து அல்லது ஏழு நபர்களுக்காக நான் செய்யும் செலவும் கூட என் மீது ஒரு சுமையாக இருந்தது. ஆனால், இப்போது அந்த நேரம் வந்து விட்டது. அதாவது, தனிநபர் விகிதாசார கணக்கின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒவ்வொரு நாளும் முன்னூறு பேர் தமது குடும்பத்துடனும் பிள்ளைகளுடனும் அவர்களோடு சேர்ந்து, பல ஏழைகளும் ஆதரவற்றவர்களும் இந்த உணவகத்திலிருந்து உணவு உண்கின்றனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**என்பத்தி ஆறாவது அடையாளம்:** ஒரு முறை எனது பல்லில் கடுமையான வலி ஏற்பட்டது. ஒரு நொடிப்பொழுது கூட நிம்மதியாக என்னால் இருக்க முடியவில்லை. நான் ஒரு நபரிடம் இதற்கு ஏதாவது சிகிச்சை இருக்கின்றதா என்று கேட்டேன். அதற்கு அவர், பற்களுக்கான சிகிச்சை பற்களை எடுப்பதுதான் என்று கூறினார். பல்லை எடுத்து விடுவதற்கு எனது உள்ளம் அஞ்சியது. அப்போது அந்த சமயத்தில் எனக்கு மயக்கம் வந்து விட்டது. நிம்மதியிழந்த நிலையில் நான் தரையில் அமர்ந்திருந்தேன். அருகில் கட்டில் போடப்பட்டிருந்தது. நான் நிம்மதியிழந்த நிலையில் அந்த கட்டிலின் விளிம்பில் எனது தலையை வைத்தேன். கொஞ்சம் தூக்கம் வந்தது. நான் விழித்தெழுந்தபோது வலியின் பெயரும் அடையாளமும் இல்லாமல் இருந்தது. நாவில் اِذَا مَرِضْتُ فَهُوَ يَشْفِيْنِ நீ நோயாளியாக இருக்கும்போது அவன் உமக்கு சுகத்தை வழங்குகின்றான் என்ற இல்ஹாமின் சொற்கள் வந்து கொண்டிருந்தன. فَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ

**என்பத்தி ஏழாவது அடையாளம்:** தில்லியில் நடைபெற்ற எனது திருமணம் தொடர்பான முன்னறிவிப்பாகும். இறைவன் புறமிருந்து اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ جَعَلَ لَكُمُ الصِّهْرَ وَالنَّسَبَ மருமகன் என்ற நிலையிலும் உயர் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற நிலையிலும் இரு தரப்பிலிருந்தும் உமக்கு கண்ணியத்தை வழங்கிய அந்த இறைவனுக்கே புகழ் உரியது என்ற இல்ஹாம் எனக்கு வந்தது. அதாவது, உமது குடும்பத்தையும் சிறப்பானதாக நாம் ஆக்கினோம். உமது மனைவியும் கூட செய்யது குடும்பத்திலிருந்து (பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தலைமுறையில் வந்த குடும்பத்திலிருந்து) வருவாள் என்று இல்ஹாமில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இல்ஹாம் திருமணத்திற்கான ஒரு முன்னறிவிப்பாக இருந்தது. அதன் மூலமாக திருமணத்திற்கான செலவுகளை நான் எவ்வாறு செய்து முடிக்கப் போகின்றேன் ? என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால், அந்த சமயத்தில் என்னிடம் எதுவுமே இருக்கவில்லை. எனவே, எவ்வாறு நான் எப்போதும் இந்த சுமையைத் தாங்கப் போகின்றேன் ? என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. அப்போது நான் இறைவனிடத்தில் இந்த செலவீனங்களுக்கான சக்தி என்னிடம் இல்லை என்று துஆ செய்தேன். அப்போது

ہر چہ باید نو عروسی را ہمہ ساماں کنم    وآنچہ در کار شما باشد عطائے آں کنم

அதாவது, எவையெல்லாம் திருமணத்திற்காக உமக்கு தேவைப்படுமோ அந்த எல்லா ஏற்பாடுகளையும் சுயமே நானே செய்வேன். மேலும், அவ்வப்போது உமக்கு தேவைப்படுபவற்றை சுயமே நானே உமக்கு தந்து கொண்டிருப்பேன் என்ற இந்த இல்ஹாம் வந்தது. அவ்வாறே நிகழ்ந்தது. திருமணத்திற்காக எந்த அளவு எனக்கு பணம் தேவைப்பட்டதோ அந்த அவசியமான செலவீனங்களுக்காக லாஹூரில் கணக்கராக இருந்த முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் அவர்கள் ஐநூறு ரூபாயை கடனாக வழங்கினார்கள். அமிர்தசரஸில் மருத்துவத் தொழில் புரிந்து வந்த கலாநூரில் வசித்து வந்த ஹகீம் முஹம்மது ஷரீஃப் என்ற பெயரை உடைய ஒருவர் எனக்கு இருநூறு ரூபாய் அல்லது முன்னூறு ரூபாய் கடனாக தந்தார். அப்போது கணக்கரான முன்ஷி அப்துல் ஹக் சாஹிப் என்னிடம் இந்தியாவில் திருமணம் செய்வது என்பது யானையை நமது வீட்டு வாசலில் கட்டி வைப்பது போன்றதாகும் என்று கூறினார்கள். இந்த செலவுகளை வழங்குவதாக சுயமே இறைவன் வாக்குறுதி வழங்கியுள்ளான் என்று நான் அவர்களுக்கு பதில் கூறினேன்.

திருமணம் செய்த பிறகு வெற்றிகளின் தொடர் ஆரம்பமானது. ஒரு காலம் இருந்தது. அப்போது வாழ்விற்கு தேவையான காரணிகள் நம்மை விட்டும் பிரிந்து சென்றுவிட்ட காரணத்தால் ஐந்து அல்லது ஏழு நபர்களுக்காக நான் செய்யும் செலவும் கூட என் மீது ஒரு சுமையாக இருந்தது. ஆனால், இப்போது அந்த நேரம் வந்து விட்டது. அதாவது தனிநபர் விகிதாசார கணக்கின் அடிப்படையில் பார்க்கும்போது, ஒவ்வொரு நாளும் முன்னூறு பேர் தமது குடும்பத்துடனும் பிள்ளைகளுடனும் அவர்களோடு சேர்ந்து, பல ஏழைகளும் ஆதரவற்றவர்களும் இந்த உணவகத்திலிருந்து உணவு உண்கின்றனர். மேலும், இந்த முன்னறிவிப்பு காதியானில் வசித்து வருகின்ற ஆரியர்களான லாலா ஷரம்பத் மற்றும் லாலா மலாவாமல் ஆகியோரிடம் கூட (அது நிறைவேறுவதற்கு) முன்னரே கூறப்பட்டிருந்தது. மேலும், ஷேக் ஹாமிது அலி மற்றும் எனக்கு தெரிந்த ஒரு சிலருக்கு இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் லாஹூரிலுள்ள கணக்கரான முன்ஷி அப்துல் ஹக் அவர்கள் இப்போது எதிரிகளின் அணியில் இருந்தாலும் அவர்கள் இந்த உண்மையான சாட்சியை மறைப்பார்கள் என்று நான் நம்பவில்லை. மேலும், அல்லாஹ்வே நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.

**என்பத்தி எட்டாவது அடையாளம்:** திலிப் சிங் தொடர்பாக பத்திரிகைகளில் அவர் பஞ்சாபிற்கு வருவார் என்று மீண்டும் மீண்டும் செய்தி வெளி வந்தது. அப்போது அவர் ஒருபோதும் வரமாட்டார். மாறாக, அவர் தடுத்து நிறுத்தப்படுவார் என்று எனக்கு காட்டப்பட்டது. நான் ஏறக்குறைய 500 பேர்களுக்கு இந்த முன்னறிவிப்பு தொடர்பாக தகவல் தெரிவித்தேன். மேலும், இரண்டு பக்கங்களைக் கொண்ட ஒரு பிரசுரத்திலும் சுருக்கமாக இந்த முன்னறிவிப்பை எழுதியிருந்தேன். இறுதியில் நான் கூறியது அவ்வாறே நிகழ்ந்தது.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மக்கள் தாங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக தாங்களே கூறிய சம்பவங்களையும் அல்லது அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கிடைத்த அசாதாரணமான ஆன்மீக அனுபவங்கள், மேலும் ஜமாஅத்தின் மீது அல்லாஹ் செய்திருக்கின்ற அருள்கள் மேலும் அதன் விளைவாக ஜமாஅத் மக்களினுடைய ஈமானில் முன்னேற்றம் ஏற்படுதல் தொடர்பான ஈமானை வலுப்படுத்தக்கூடிய சம்பவங்களை நான் அவ்வப்போது எடுத்துக் கூறுகின்றேன். பெரும்பாலார் எனக்கு எழுதுகின்றனர். இது போன்ற சம்வங்களை கூறிக் கொண்டு இருங்கள் என்று கருத்து தெரிவிக்கின்றனர். ஏனென்றால் இந்த சம்பவங்கள் உள்ளம் கவரக்கூடியதாக இருக்கின்ற அதே வேளையில் அவை எங்களுடைய குழந்தைகளின் கவனத்தையும் ஈர்க்கின்றது. இளைஞர்களுடைய மார்க்க மற்றும் ஆன்மீக நிலைமைகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக அவை அமைகின்றன. மேலும் எங்களுடைய நிலைமைகளிலும் முன்னேற்றத்திற்கு காரணிகளாக அவை அமைகின்றன. மேலும் நாங்கள் எங்களின் நிலைமைகளை சரி செய்வதன் பக்கம் இவைகள் கவனமூட்டுகின்றன. பிறப்பால் அஹ்மதிகளாக இருக்கின்ற சிலர் இவ்வாறு எழுதுகின்றனர். புதிதாக வரக்கூடியவர்களின் ஈமானிய நிலை மற்றும் அல்லாஹ்வோடு அவர்களுக்கு இருக்கின்ற தொடர்பு எங்களை வெட்கப்பட வைக்கின்றது. மேலும் நாமும் ஈமானில் முன்னேற வேண்டும் என சிந்திக்க வைக்கின்றது. இதே போன்று சில புதிய அஹ்மதிகளும் இந்த சம்பவங்கள் மூலமாக எங்களது ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்று கூறுகின்றனர்.

---

ஐரோப்பாவில் இருக்கக்கூடிய மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய மக்களுக்கும் அல்லாஹ் அடையாளங்களைக் காட்டுகின்றான். அவர்களின் ஈமானில் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளை அல்லாஹ் செய்கின்றான். இங்கு பிரிட்டனிலும் கூட ஏராளமான புதிய அஹ்மதிகள் இங்குள்ள உள்ளூர் வாசிகளாக இருக்கின்றனர். அவர்களுக்கு பைஅத் செய்து சிறிது காலம் ஆகி இருந்தாலும் சரியே. ஒவ்வொரு நாளும் அவர்களுடைய ஈமான் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றது. சிறிது காலத்திற்கு முன்பு பைஅத் செய்த புதிய அஹ்மதிகளாயினும் சரியே. அவர்கள் எப்படிப்பட்ட அனுபவங்களைக் கடக்கின்றனர் என்றால் அவை வியக்கத்தக்கதாக இருக்கின்றது. அவை இறை இருப்பு சம்பந்தமான நிச்சய உறுதியில் அவர்கள் முன்னேறுவதற்கு காரணமாக அமைகின்றது. ஜமாஅத்தின் உண்மைத்துவமும் அவர்கள் மீது திறந்து கொண்டே செல்கிறது. கிலாஃபத்தோடு கலப்பற்ற பற்று மற்றும் நன்றியுணர்வுள்ள தொடர்பிலும் கூட அவர்கள் முன்னேறுகின்றனர். அவர்களில் ஆண்களும் அடங்குவர், பெண்களும் அடங்குவர்.

---

மேற்கத்திய நாடுகளில் வசிக்கக்கூடியவர்களில் எவர்கள் மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கின்றனரோ அவர்களுக்கும் அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். அஹ்மதிய்யத்தின் உண்மையை அவர்களுக்கு அவன் வெளிப்படுத்துகின்றான். பிறகு இன்னொரு பிரிவினர் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்பதில்லை தான். ஆனால், இஸ்லாத்தின் மேன்மை அஹ்மதிய்யத்தின் மூலமாக அவர்களுக்கு தெரிய வருகின்றது. அதுபோன்ற பல சம்பங்களை நான் எனது சுற்றுப் பயணத்திற்கு பின்பும் அல்லது மாநாடுகளுக்கு பிறகும் எடுத்துக் கூறி வருகின்றேன்.

---

உலகின் பல்வேறு நாடுகளுடன் தொடர்புடைய மக்களுக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையின் பக்கம் இறைவனின் வழிகாட்டல் கிடைத்திருப்பது, தப்லீகில் M.T.A -வின் பங்கு, புதிய ஜமாஅத்துகளின் தோற்றம், புதிய அஹ்மதிகளின் பற்று மற்றும் நன்றியுணர்வு, தியாகம், அவர்களின் தப்லீக் உணர்வு, அவர்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது, அவர்களின் பொறுமை, அவர்களிடம் காணப்படும் கொள்கையில் உறுதியாக நிலைநிற்கும் தன்மை, அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவர்களின் ஈமானை வலுப்படுத்துவதற்காக காட்டப்பட்ட வலுவான அடையாளங்களின் வெளிப்பாடு, எதிரிகளின் எதிர்ப்பு, அவர்களுடன் அல்லாஹ் அவர்கள் படிப்பினை பெறும் வகையில் நடந்து கொண்டது, ஜமாஅத் நூல்கள் மற்றும் பிரசுரங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள், புதிதாக பைஅத் செய்தவர்களிடம் அவர்கள் பைஅத் செய்த பிறகு அவர்களது வாழ்வில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் தூய மாற்றங்கள், வானொலி நிகழ்ச்சிகள் மூலம் நடந்த பைஅத்துகள் மற்றும் தப்லீக் முயற்சிகளின் நல்ல விளைவுகள் மற்றும் தாக்கங்கள் ஆகியவை தொடர்பாக உள்ள சம்பவங்களை ஹுஸூர் அவர்கள் ஈமானுக்கு எழுச்சியூட்டும் வகையிலும் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையிலும் எடுத்துக் கூறினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**

**6 அக்டோபர் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **29 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

மக்கள் தாங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டது தொடர்பாக தாங்களே கூறிய சம்பவங்களையும் அல்லது அவர்கள் அஹ்மதிய்பத்தை ஏற்றுக் கொண்ட பிறகு கிடைத்த அசாதாரணமான ஆன்மீக அனுபவங்கள், மேலும் ஜமாஅத்தின் மீது அல்லாஹ் செய்திருக்கின்ற அருள்கள் மேலும் அதன் விளைவாக ஜமாஅத் மக்களினுடைய ஈமானில் முன்னேற்றம் ஏற்படுதல் தொடர்பான ஈமானை வலுப்படுத்தக்கூடிய சம்பவங்களை நான் அவ்வப்போது எடுத்துக் கூறுகின்றேன். பெரும்பாலார் எனக்கு எழுதுகின்றனர். இது போன்ற சம்பவங்களை கூறிக் கொண்டு இருங்கள் என்று கருத்து தெரிவிக்-கின்றனர். ஏனென்றால் இந்த சம்பவங்கள் உள்ளம் கவரக்கூடியதாக இருக்கின்ற அதே வேளையில் எங்களுடைய குழந்தைகளின் கவனத்தையும் ஈர்க்கின்றது. இளைஞர்களுடைய மார்க்க மற்றும் ஆன்மீக நிலைமைகளின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைகின்றன. மேலும், எங்களுடைய நிலைமைகளிலும் முன்னேற்றத்திற்கு காரணிகளாக அமைகின்றன. மேலும் நாங்கள் எங்களின் நிலைமைகளை சரி செய்வதன் பக்கம் இவைகள் கவனமூட்டுகின்றன.

பிறப்பால் அஹ்மதிகளாக இருக்கின்ற சிலர் இவ்வாறு எழுதுகின்றனர். புதிதாக வரக் கூடியவர்களின் ஈமானிய நிலை மற்றும் அல்லாஹ்வோடு அவர்களுக்கு இருக்கின்ற தொடர்பு எங்களை வெட்கப்பட வைக்கின்றது. மேலும் நாமும் ஈமானில் முன்னேற வேண்டும் என சிந்திக்க வைக்கின்றது. இதே போன்று சில புதிய அஹ்மதிகளும் இந்த சம்பவங்கள் மூலமாக எங்களது ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகின்றது என்று கூறுகின்றனர்.

ஆனால் அத்தோடு எப்படிப்பட்ட மக்களும் இருக்கின்றனர் என்றால் இந்த மேற்கத்திய நாடுகளில் இருக்கக் கூடியவர்கள் அல்லது தங்களை அதிகம் கற்றறிந்தவர்கள் என்று கருதக் கூடியவர்கள், தங்களை முன்னேற்றம் அடைந்தவர்கள் என்று கருதக் கூடியவர்கள் பாகிஸ்தானில் இருந்து தான் வந்துள்ளனர். ஆனால் உலகம் அவர்களை தன்னுள் எந்த அளவுக்கு ஈர்த்துக் கொண்டது என்றால் அல்லது அவர்கள் உலகில் எந்த அளவு மூழ்கி விட்டார்கள் என்றால் மேலும் அதனால் ஈர்க்கப்பட்டு

விட்டார்கள் என்றால் அவர்களுக்கு இறைவன் பக்கம் கவனம் இருப்பதில்லை. அல்லது ஒரு அஹ்மதிக்கு எந்த அளவுக்கு இறைவனின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமோ அந்த அளவுக்கு கவனம் இருப்பதில்லை. மேலும் அல்லாஹ்விற்குரிய கவனத்திற்கான உரிமையை வழங்குவதில்லை. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு மேலும் அன்னாரின் பைஅத் செய்தவர்களுக்கு எந்த அளவுக்கு கடமையோ அந்த அளவிற்கு கவனம் செலுத்துவதில்லை. அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனால் நிறுவப்பட்ட ஜமாஅத்திற்குரிய உரிமையை செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. சிறிதளவு கவனம் இருக்குமென்றாலும் அது எவ்வளவு குறைவானதாக இருக்கின்றதென்றால் அது இல்லாததற்கு சமமாகும். இவர்கள் மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதிலிருந்து கவனமற்றவர் –களாக இருக்கின்றார்கள். மார்க்க நிலைமையை சரி செய்வது தொடர்பாக இவர்கள் சிந்திப்பதில்லை. அல்லது மிகக் குறைவாக சிந்திக்கின்றனர்.

அப்படிப்பட்டவர்கள் புதிதாக வரக் கூடியவர்கள் கூறக்கூடிய இது போன்ற விஷயங்களை கேட்கும் போது அல்லது ஆன்மீக முன்னேற்றத்திற்கு காரமாக இருக்கக்கூடிய சம்பவங்களை கேட்கும் போது ஆட்சேபிக்கும் விதமாக கூறுவது என்னவென்றால் பைஅத் மற்றும் ஈமானில் முன்னேற்றம் தொடர்பான இந்த சம்பவங்கள் ஆப்ரிக்கா அல்லது அரபு நாடுகள் அல்லது ஆசியாவின் நாடுகளில் வசிக்கக் கூடியவர்களோடு மட்டுமே ஏன் நடக்கின்றது? என்கின்றனர். இப்படிப்பட்ட சம்வங்கள் ஐரோப்பாவில் வசிப்பவர்களோடு ஏன் நடப்பதில்லை? என்கின்றனர். இவர்களுக்கு ஏன் கனவுகள் மூலமாக வழிகாட்டுதல் கிடைப்பதில்லை? இவர்களுக்கு ஏன் மார்க்கப் புத்தகங்களை படித்து வழிகாட்டுதல் கிடைப்பதில்லை? கவனம் ஏற்படுவதில்லை? இவர்களுக்கு ஏன் ஆன்மீக அனுபவங்கள் கிடைப்பதில்லை?

அசல் விஷயம் என்னவென்றால், ஐரோப்பாவில் இருக்கக்கூடிய மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்தக்கூடிய மக்களுக்கும் அல்லாஹ் அடையாளங்களைக் காட்டுகின்றான். அவர்களின் ஈமானில் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளை அல்லாஹ் செய்கின்றான். இங்கு பிரிட்டனிலும் கூட ஏராளமான புதிய அஹ்மதிகள் இங்குள்ள உள்ளூர் வாசிகளாக இருக்கின்றனர். அவர்களுக்கு பைஅத் செய்து சிறிது காலம் ஆகி இருந்தாலும் சரியே. ஒவ்வொரு நாளும் அவர்களுடைய ஈமான் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றது. சிறிது காலத்திற்கு முன்பு பைஅத் செய்த புதிய அஹ்மதிகளாயினும் சரியே. அவர்கள் எப்படிப்பட்ட அனுபவங்களைக் கடக்கின்றனர் என்றால் அவை வியக்கத்தக்கதாக இருக்கின்றது. அவை இறை இருப்பு சம்பந்தமான நிச்சய உறுதியில் அவர்கள் முன்னேறுவதற்கு காரணமாக அமைகின்றது. ஜமாஅத்தின் உண்மைத்துவமும் அவர்கள் மீது திறந்து கொண்டே செல்கிறது. கிலாஃபத்தோடு கலப்பற்ற பற்று மற்றும் நன்றியுணர்வுள்ள தொடர்பிலும் கூட அவர்கள் முன்னேறுகின்றனர். அவர்களில் ஆண்களும் அடங்குவர், பெண்களும் அடங்குவர். லஜ்னா, குத்தாம் மற்றும் அன்ஸாரின் இஜ்திமாக்களில் கலந்து கொண்டு அவர்கள் தங்களுடைய சம்பவங்களை தாங்களே எடுத்துரைக்கின்றனர். MTA –விலும் சில மக்கள் கூறுகின்றனர். அவைகள் மிகவும் ஈமானுக்கு உறுதி அளிக்கக் கூடியவையாக இருக்கின்றன.

எவ்வாறிருப்பினும், மேற்கத்திய நாடுகளில் வசிக்கக்கூடியவர்களில் எவர்கள் மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கின்றனரோ அவர்களுக்கும் அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். அஹ்மதிய்யத்தின் உண்மையை அவர்களுக்கு அவன் வெளிப்படுத்துகின்றான்.

பிறகு இன்னொரு பிரிவினர் எப்படிப் –பட்டவர்கள் என்றால் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்பதில்லை தான். ஆனால், இஸ்லாத்தின் மேன்மை அஹ்மதிய்யத்தின் மூலமாக அவர்களுக்கு தெரிய வருகின்றது. அதுபோன்ற பல சம்பங்களை நான் எனது சுற்றுப் பயணத்திற்கு பின்பும் அல்லது மாநாடுகளுக்கு பிறகும் எடுத்துக் கூறி வருகின்றேன். ஆனால் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், எவர்கள் அல்லாஹ்வின் பக்கம் செல்கின்றார்களோ அவர்களுக்கே அல்லாஹ் நேர்வழி காட்டுகின்றான். ஒரு மனிதன் உலகத்தில் மூழ்கிக் கிடக்கின்றான் என்றால் இறைவன் என்ற அம்சமே அவனிடத்தில் காலியாக இருக்குமென்றால் அவனுக்கு மார்க்கத்தோடும் இறைவனோடும் எவ்வித தொடர்பும் இல்லையென்றால் மேலும் அவனே தனது மறுமையை நாசமாக்குவதில் விரைகின்றான் என்றால் பிறகு அல்லாஹ்வும் அப்படிப்பட்ட மக்களை பொருட்படுத்துவதில்லை. அவர்கள் நேர்வழி மற்றும் வழிகாட்டல்களிலிருந்து விலக்கப்பட்டவர்களாகி விடுகின்றனர்.

பிறகு நபிமார்களின் வரலாறும் கூட நமக்கு இதையே கூறுகின்றது. அதாவது மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்கள் மற்றும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் பொதுவாக ஏழைகளும், பலவீனமாகவர்களுமாகவே இருக்கின்றனர். பணிவானவர்களிடையே பொதுவாக அல்லாஹ்வின் பக்கம் செல்ல வேண்டும் என்ற துடிப்பு மேலும் அல்லாஹ்வின் மீது அச்சம் அதிகமாக இருக்கின்றது. உலகவாதிகள் மற்றும் ஆற்றல் உடையவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். அதை அல்லாஹ்வும் திருக்குர்ஆனில் கூறி இருக்கின்றான். உங்களுக்கு என்ன செல்வாக்கு இருக்கின்றது? என்கின்றனர். நம்மை அவர்கள் இழிவானவர்களாகவே காண்கின்றனர். எனவே உலகவாதிகள் அகங்காரத்தால் நிரம்பி இருக்கின்றனர். அவர்களுக்கு தங்களது ஆணவத்தின் காரணமாகவும் பிறகு உலக பணிகளில் மூழ்கி இருப்பதன் காரணமாகவும் மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்த அவர்களுக்கு நேரமே இருப்ப –தில்லை. பிறகு ஐரோப்பாவின் பெரும்பான்மை நாத்திகர்களாக ஆகிவிட்டனர். அல்லது மேற்கத்திய நாடுகளில் முன்னேற்றம் அடைந்த நாடுகளின் பெரும்பான்மை நாத்திகர்களாக ஆகிவிட்டனர். அவர்களுக்கு இறைவனைப் பற்றிய கவலையில்லை. பிறகு இறைவனும் அவர்களை ஏன் பொருட்படுத்த வேண்டும்? ஏன் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த உலகவாதிகளை படம்பிடித்துக் காட்டியவாறு கூறுகிறார்கள்: சூரா அஸ்ரில் அல்லாஹ் நிராகரிப்பாளர்கள் மற்றும் நம்பிக்கையாளர்களின் உதாரணத்தைக் கூறி இருக்கின்றான். நிராகரிப்பாளர்களின் வாழ்க்கை முற்றிலும் விலங்குகளைப் போன்ற வாழ்க்கை ஆகும். அவர்களுக்கு உண்பது குடிப்பது மற்றும் இச்சைகளைத் தவிர வேறு எந்த பணியும் இருப்பதில்லை. يَأْكُلُوْنَ كَمَا تَأْكُلُ الْأَنْعَامُ அதாவது, அவர்கள் கால்நடைகள் உண்பதைப் போன்று உண்கின்றனர். (47:13)

அன்னார் கூறுகின்றார்கள் : பாருங்கள்! ஒரு காளை மாடு உணவு உண்ணுகின்றது. ஆனால் உளுவதற்கான நேரம் வரும் போது அமர்ந்து விட்டால் அதாவது ஆரம்ப காலத்தில் விவசாயத்திற்கு நிலம் உளுவதற்கு எருமைகளை பயன்படுத்துவார்கள். இங்கும் கூட ஆரம்ப காலத்தில் குதிரைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. உளக்கூடிய நேரத்தில் அமர்ந்து விட்டால் மேலும் உண்ணக்கூடிய வேலையை மட்டும் செய்து வந்தால் அதன் விளைவு என்னவாக இருக்கும்? அந்த விவசாயி அதை மாடு அறுக்கக்கூடிய இடத்தில் அறுக்கக் கூடியவனிடம் விற்று விடுவார். இறைச்சிக் கடை காரருக்கு கொடுத்து விடுவார். அதே போல் எவர்கள் இறை கட்டளைகளை பின்பற்றுவதை பொருட்படுத்துவதில்லையோ மேலும் தங்களுடைய வாழ்க்கையை தீமையில் கழிக்கின்றார்களோ அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: قُلْ مَا يَعْبَؤُا بِكُمْ رَبِّيْ لَوْلَا دُعَآؤُكُمْ அதாவது, நீங்கள் அல்லாஹ்வை வணங்கவில்லை என்றால் பிறகு என்னுடைய இறைவன் உங்களை ஏன் பொருட்படுத்த வேண்டும்? (25:78) (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 181; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, அல்லாஹ் அவன் பக்கம் குனிபவர்களையும் மற்றும் நேர்வழியை கேட்பவர்களையே பொருட்படுத்துகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக மேலும் கூறுகின் –றார்கள்: உண்மை மிகப்பெரிய விஷயமாகும். அது அல்லாமல் நற்செயல்கள் முழுமையடைய முடியாது. இறைவன் தன்னுடைய நடைமுறையை விடுவதில்லை. மனிதன் தன்னுடைய வழிமுறையை விடுவதில்லை. அதாவது சீர்கெட்ட மனிதர்கள். எனவேதான் கூறினான்.

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا அதாவது எவர்கள் நம்முடைய வழியில் முயற்சிக்கின்றார்களோ நாம் அவர்களுக்கு வழிகாட்டுகின்றோம். (29:70) (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 305; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே, எவர்கள் முயற்சிக்கின்றார்களோ மேலும், இறைவனுடைய உண்மையான மார்க்கத்தை அடைய வேண்டும் என்ற முயற்சியில் இருக்கின்றார்களோ அவர்கள் நேர்வழியும் பெறுகின்றனர். ஈமானிலும் முன்னேறுகின்றனர். முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். மேலும் சிலருக்கு அல்லாஹ் அவர்களின் சில நன்மைகளின் காரணமாக அவர்களின் மீது அருள் புரிகின்றான். அவர்களுக்கு வழிகாட்டுகின்றான். அதுபோன்ற –வர்களின் ஈமானை வலுவூட்டக்கூடிய

சம்பவங்களை நாம் எடுத்துக் கூறுகின்றோம். கலப்பற்ற தன்மையில் முன்னேறுவது தொடர்பான சில ஆன்மீக சம்பவங்களில் சிலவற்றை இன்றும் நான் எடுத்துள்ளேன்.

புர்கினோ ஃபாஸோவிலிருந்து அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒரு கிராமத்தில் நமது உள்ளூர் மிஷனரி தப்லீக்கிற்காக சென்றார். தப்லீக்கிற்குப்பிறகு பைஅத் வாங்க எண்ணிய போது ஒரு வயதான பெண்மணி மட்டுமே பைஅத் செய்தார்கள். மேலும் முஅல்லிம் சாஹிப் அவர்கள் கிராமத்தினரிடம் கூறினார். இங்கிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் தான் எங்களுடைய பள்ளிவாயில் இருக்கின்றது. உங்களில் யாருக்காவது எங்களுடைய ஜமாஅத்தைப் பற்றி அறிய வேண்டுமென்றால் நீங்கள் அங்கு வரலாம். அங்கு ஜுமுஆ தொழுவதற்கான ஏற்பாடும் உள்ளது. எவ்வாறிருப்பினும் அந்த பெண்மணி பைஅத் செய்திருந்தார்கள்.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: மழையின் காரணமாக கிராமத்திற்கும் பள்ளிவாசலுக்கும் இடையேயுள்ள பாதையில் மழையினால் ஒரு நீரோடை ஏற்பட்டு விட்டது. மேலும் மழை நீரால் அது நிரம்பி காணப்பட்டது. பைஅத் செய்த அந்த முதிய பெண்மணி ஒவ்வொரு ஜுமுஆ அன்றும் தன்னுடைய தொழுகை விரிப்பை எடுத்துக் கொண்டு ஜுமுஆவிற்காக பள்ளிவாயிலுக்கு வர முயற்சித்தார். மழை நீர் ஓடை நிரம்பி இருப்பதைக் கண்டு தொழுகை விரிப்பை அங்கேயே விரித்து நான் அஹ்மதிகளோடு ஜுமுஆ தொழுது விட்டேன் என்று கூறுவார்கள். ஏனென்றால் நான் அஹ்மதிகளோடு ஜுமுஆ தொழ வேண்டும் என்ற நிய்யத்தோடு வந்தேன்.

அவர் கூறுகிறார்: ஒரு மாதத்திற்குப் பிறகு மழை நீர் குறைந்த பிறகு அந்த பெண்மணி பள்ளிவாயிலுக்கு வந்து சம்பவத்தை எடுத்துக் கூறினார். இது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்களிடத்தில் ஏற்பட்ட கலப்பற்ற தன்மையாகும். அந்த கூறிய இந்த சம்பவத்தைக் கேட்ட பிறகு முஅல்லிம் சாஹிப் அதே கிராமத்திற்கு மீண்டும் தப்லீக்கிற்காக சென்றார். மேலும் கிராமத்தினரிடம் இந்த முதிய பெண்மணிக்கு உண்மையின் தேட்டம் இருந்தது. எனவே அல்லாஹ் அவரின் மீது அருள் செய்துள்ளான். அதற்காக அவர்கள் இவ்வளவு தியாகம் செய்துள்ளார்கள். ஒவ்வொரு வாரமும் ஜுமுஆவிற்காக சென்று பள்ளி வரை செல்ல முடியாமல் அங்கேயே அமர்ந்து விட்டு வருவார்கள். தண்ணீர் காரமாக அவர்களால் அங்கு வரை செய்ய முடியவில்லை. ஆனால் அவருடைய கலப்பற்ற தன்மையை பாருங்கள் என்று முஅல்லிம் சாஹிப் சம்பவத்தை கூறிய போது அங்கிருந்த மற்ற மக்கள் இந்த பெண்மணியின் கலப்பற்ற தன்மையைக் கண்டு அந்த பெண்மணியின் சில உறவினர்களையும் சேர்த்து மொத்தம் 30 பேர் பைஅத் செய்தனர்.

பிறகு கனவுகள் மூலமாக சிலர் அஹ்மதிய்யத்தை ஏற்கின்றனர். ஃபிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஒரு பெண்மணி ஆசியா சாஹிபா பைஅத் செய்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் எனது பைஅத்தின் சம்பவத்தை கூறக் காரணம், நீங்கள் என்மீது மகிழ்ச்சி அடைவீர்கள். கூறுகிறார்கள். வழக்கம் போல் இணைய தளத்தில் நான் புதிய சேனல்களை தேடிக் கொண்டிருந்தேன். அப்போது அல் ஹிவாருல் முபாஷிரின் லிங்க் கிடைத்தது. அதில் மஸீஹின் மரணம் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருந்தது. நான் எல்லா வகையான சந்தேகங்களிலிருந்தும் விலகிய மேலும் நிச்சய உறுதியால் நிரம்பிய அழகிய நடை உடைய மேலும் மறுக்க இயலாத ஆதாரங்களை உடைய கேட்டு நான் வியந்து போனேன்.

அவர் கூறுகிறார்: இச்சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்பு நான் கனவில் கண்டேன். நான் ஓர் இருட்டான கிணற்றில் விழப் போகின்றேன். மேலும் நான் கிணற்றின் விளிம்பை எனது கைகளால் வலுவாக பிடித்துள்ளேன். கால்கள் கீழே தொங்கிக் கொண்டிருக்கின்றது. திடீரென்று நான் மேலே பார்த்த போது மூன்று, நான்கு வெள்ளை பறவைகள் தென்பட்டன. அதனுடைய நிறம் மிக அதிக வெண்மையாக இருந்தது. அவர்கள் யாரென்று எனக்குத் தெரியவில்லை. அந்த பறவைகள் என்னை காப்பாற்றும் முயற்சியில் இருந்தன. ஆரம்பத்தில் இந்த கனவு பற்றி எனக்கு புரியவில்லை. ஆனால் இவர்கள் ஹிவாருல் முபாஷிர் பேனலின் உறுப்பினர்கள் என்று தெரிய வந்தது. அவர்கள் பறவைகளின் வடிவில் காண்பிக்கப்பட்டுள்ளார் –கள். இந்த ஜமாஅத்தினுடைய தோற்றுநர் மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் செய்துள்ளார் என்பது ஆரம்பத்தில் எனக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால் எனக்கு சந்தேகம் ஏற்பட்டது. பிறகு நான் ஜமாஅத்தின் புத்தங்களை குறிப்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தங்களை படிக்க ஆரம்பித்தேன். அவைகளில் இஸ்லாத்திற்கு எதிரான எந்தவொரு விஷயமும் எனக்குத் தென்படவில்லை. மாறாக அதற்கு நேர்மாற்றமாக அன்னார் இஸ்லாம், முஸ்லிம்கள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வலுவாக பாதுகாக்கக்கூடிய வீரராக இருந்தார்கள். அந்த புத்தகங்கள் இஸ்லாத்தின் எதிரிகளின் மீது திகிலை உருவாக்குகின்றன.

அவர் கூறுகிறார்: பிறகு நான் இஸ்திஹாரா செய்தேன். அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு எனக்கு என்னுடைய ஒரு தோழி கூறினார். அவள் தனது கனவில் கண்டுள்ளார். நானும் அவளும் என்னுடைய மாமியாரின் வீட்டில் பல்வேறு அறைகளில் ஒரு குறிப்பான அறையை தேடுகிறோம். அப்போது ஒரு ஒளிமயமான அறை தென்பட்டது. அப்போது நான் இந்த அறை எனக்கு பிடித்திருக்கிறது என்று கூறுகிறேன்.

அவர் கூறுகிறார்: இந்த கனவிலிருந்து நான் புரிந்தது என்னவென்றால், நான் ஜமாஅத்தில் இணைய வேண்டும். எனவே நான் பைஅத் செய்து விட்டேன்.

M.T.A –வின் மூலமாக துருக்கியில் ஒரு பெண்மணி பைஅத் செய்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் எனது பைஅத்தின் விவரத்தை கூற விரும்புகிறேன். 2010 ஆம் ஆண்டு ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. ஜமாஅத்தில் இணையும் நல்வாய்ப்பும் கிடைத்தது. என்னுடைய கணவர் M.T.A அல் அரேபியாவை மிகவும் ஆர்வமோடு பார்த்து வந்தார். எனவே நானும் பார்க்க ஆரம்பித்தேன். சில வேளைகளில் எனது கணவர் இல்லாத வேளைகளிலும் M.T.A வைப் பார்த்து வந்தேன். என்னுடைய கணவர் என்னிடம், நீ முழு திருப்தியடைந்த பிறகு பைஅத் செய்து என்று கூறினார். நான் கூறினேன். இந்த பொறுப்பை நான் ஏற்க முடியாது. குடும்பம் பெரியதாகும். வீட்டில் அதிகமாக பொறுப்புகள் உள்ளன. பிறகு தஜ்ஜால் தொடர்பாக ஜமாஅத் உருவாக்கிய காணொலியைக் கண்டேன். அதன் விவரங்கள் மிகவும் அறிவுப்பூர்வமாக இருந்தது. இதற்கு முன்பு இதைப் போன்ற விளக்கத்தை நான் கேட்டதில்லை. பிறகு மேலும் M.T.A –வைப் பார்க்க ஆரம்பித்தேன். மேலும் அல் ஹிவாருல் முபாஷிர் நிகழ்ச்சியை பார்த்தேன். தொடர்ந்து புத்தங்களை படித்தேன். அதற்குப் பிறகு ஒரு முறை அப்துல் காதிர் அவ்தே சாஹிப் இங்கு சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்போது நான் பைஅத் செய்தேன். என்னுடைய மருமகளும், மருமகனும் கூட பைஅத் செய்து விட்டனர். ஜமாஅத் சார்ந்த கருத்துப்பரிமாற்றங்கள் செய்கின்றனர். மேலும் இதுவே உண்மையான இஸ்லாம் என்கின்றனர்.

அவர் கூறுகிறார்: நான் பைஅத் செய்த நாளன்று கனவில் கண்டேன். நான் சூரா கஹஃபின் வசனங்களை ஓதுகின்றேன். அப்போது இறைவன் நம்மை தஜ்ஜாலின் தீமையிலிருந்து காப்பாற்றுவான் என்றும் மேலும் நான் இமாம் மஹ்தியின் உதவியாளர்களின் ஒருவராக இருப்பேன் என்ற நிச்சய உறுதியும் ஏற்பட்டது. அவன் எனக்கு ஈமானை வழங்கி இருக்கின்றான். அல்லாஹ்வுக்கு நன்றி. மேலும் நான் இந்த பொறுப்பை நிறைவேற்றக்கூடியவளாக ஆவேனாக.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

இவ்வாறு தாங்களே சம்பவங்களை எழுதி துஆவிற்காகவும் எழுதுகின்றனர். பிறகு புதிய ஜமாஅத்துகள் நிறுவப்படுவதற்கான சில சம்பவங்கள் அல்லாஹ் ஜமாஅத்துகளை எவ்வாறு உருவாக்குகிறான் என்பது தொடர்பான சம்பவங்கள்:

அப்துல் குத்தூஸ் சாஹிப் பெனினின் முபல்லிக் ஆவார். இவர் எழுதுகின்றார்: முஅல்லிம் ஸகரிய்யா சாஹிப் ஒரு கிராமத்திற்குச் தப்லீக்கிற்காகச் சென்றார். அங்கு ஒருவர் கூறினார். இப்போது மக்கள் வேலைக்காக கிராமத்திற்கு வெளியே சென்றுள்ளனர். ஜுமுஆ தினத்தன்று வாருங்கள். அப்போது மக்கள் இருப்பார்கள். ஆக, முஅல்லிம் சாஹிப் ஜுமுஆ அன்று மீண்டும் அந்த கிராமத்திற்குச் சென்று பள்ளிவாயிலுக்குள் நுழைந்த பிறகு இரண்டு நஃபில்கள் தொழுது விட்டு இமாம் சாஹிப் மற்றும் அந்த கிராமத்து கமிட்டியிடம் அனுமதி பெற்ற பிறகு தப்லீகை ஆரம்பித்தார்கள். முஅல்லிம் சாஹிப் சூரா ஃபாத்திஹாவின் விரிவுரை மற்றும் இமாம் மஹ்தியின் வருகை தொடர்பாக சொற்பொழிவு ஆற்றினார். மக்கள் சொற்பொழிவிற்கு நடுவே அல்லாஹு அக்பர் என்ற முழக்கங்களை எழுப்பினர்.

சொற்பொழிவு நிறைவடைந்த பிறகு அந்த பள்ளிவாயிலின் கமிட்டியின் தலைவர் கூறினார்: நான் முஸ்லிமாகப் பிறந்தேன். ஆனால் இன்று வரை சூரா ஃபாத்திஹாவிற்கு இதுபோன்ற ஒரு விரிவுரையைக் கேட்டதில்லை. இதுதான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகள் என்றால் பிறகு நான் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் இந்த ஜமாஅத்தை ஏற்றுக் கொள்கின்றோம். இவ்வாறு அந்த ஜமாஅத்தின் இமாமோடு சேர்ந்து அந்த அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு ஒரு புதிய ஜமாஅத் நிறுவப்பட்டது.

அவர் கூறுகிறார்: அந்த கிராமத்தின் மவ்லவி கடுமையான எதிர் நடவடிக்கையை வெளிப்படுத்தினார். நம்முடைய முஅல்லிம் வீட்டிற்கு திரும்பி வந்த போது அந்த மவ்லவி போன் செய்து இனிமேல் இந்த கிராமத்திற்கும் பள்ளிவாயிலுக்கும் வரக்கூடாது என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யா பெனினின் தேசிய இஜ்திமா தொடர்பாக அந்த கிராமத்திற்குச் சென்றபோது குத்தாம்களிடம் இஜ்திமாவில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தபோது அந்த மவ்லவி மீண்டும் தடுத்தார். மேலும், தன்னோடு குத்தாம்களை அழைத்துச் செல்லக் கூடாது என்றார். ஆனால், புதிதாக பைஅத் செய்த குத்தாம்கள் மவ்லவியின் பேச்சை மறுத்து விட்டு அனைவரும் இஜ்திமாவில் கலந்து கொண்டார்கள். இவ்வாறு அல்லாஹ் எதிரி மவ்லவிகளையும் இழிவடையச் செய்கின்றான். மேலும் புதிய ஜமாஅத்துகளையும் உருவாக்குகின்றான்.

புதிய ஜமாஅத்துகள் உருவாவது தொடர்பாக இன்னொரு சம்பவத்தை அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அல்லாஹ் எங்களுடைய பகுதியில் ஒரு கிராமத்தில் முதலில் ஒரு அஹ்மதி கூட இல்லை. அங்கு மீண்டும் மீண்டும் சுற்றுப் பயணம் செல்லும் வாய்ப்பு கிடைத்து. அதிகமாக பிரசுரம் விநியோகித்தோம். அதே போன்று ஜமாஅத்தின் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அந்த கிராமத்தில் விநியோகித்தோம். அதன் விளைவாக அந்த கிராமத்தில் இப்போது அல்லாஹ்வின் அருளால் பைஅத்துகள் நிகழ ஆரம்பித்ததோடு முறையாக ஜமாஅத்தும் நிறுவப்பட்டு விட்டது. இறை அருளால் பள்ளிவாயில் கட்டுவதற்கு அங்கு இடமும் வாங்கப்படுகின்றது. உள்ளூர் மக்கள் பள்ளிவாயில் கட்டுவதற்கு தாங்களே செங்கலை தயாரிக்கின்றார்கள். ஆனால் அத்தோடு மற்ற முஸ்லிம்கள் தரப்பிலிருந்து எதிர்ப்பும் ஆரம்பமானது. எதிரிகள் ஜமாஅத்திற்கு எதிராக தீங்கை விளைவிக்க முயற்சிக்கின்றனர்.

அவர் கூறுகின்றார்: நாங்கள் ஊர் பொறுப்பாளர்களிடம் அனுமதி பெற்று முனாஸிராவிற்கான ஏற்பாடுகளை செய்தோம். முழு கிராமத்திலும் அறிவிப்பு செய்தோம். மேலும் சுன்னி மவ்லவிகளிடம் அவர்கள் உண்மையாளர்களாயின் எங்களிடம் வந்து முனாஸிரா செய்யுமாறு கூறினோம். இவ்வாறு தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கேற்ப முனாஸிரா நடந்தது. அதில் ஏராளமான அஹ்மதி அல்லாதோர் கலந்து கொண்டனர். ஆனால் சுன்னி மவ்லவிகளில் ஒருவர் கூட வரவில்லை. இவ்வாறு மவ்லவிகளிடம் தீங்கை பரப்புவதைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதை மக்கள் அறிந்து கொண்டனர். அல்லாஹ் பல்வேறு வழிமுறைகள் மூலமாக நேர்வழி காட்டுகின்றான். எவர்கள் உண்மையிலேயே மார்க்கத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றார்களோ அவர்களுக்கு வழிகாட்டுகின்றான்.

புர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்: ஒரு கிராமத்தில் தப்லீக் செய்யப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் கனிசமான எண்ணிக்கையில் பைஅத்கள் கிடைத்தன. அங்கு ஒரு பள்ளிவாயிலில் முஅல்லிம் சாஹிப் பணி அமர்த்தப்பட்டார். முறையாக ஜுமுஆ தொழுகை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அஹ்மதி அல்லாத மவ்லவி குழப்பத்தை எற்படுத்த முயற்சித்தார். ஜுமுஆ நேரத்தில் பள்ளிவாயிலுக்குள் வந்து மக்களை அஹ்மதிய்யத்தை விட்டு விலக்குவதற்கு மக்களை தூண்டினார். ஆனால் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே இருந்தது. அந்த மவ்லவியால் ஒன்றும் செய்ய முடியாமல் போன போது நமது பள்ளிக்கு எதிராக ஒரு பள்ளியை கட்டினார். மேலும் இனி மேல் அஹ்மதிய்யா பள்ளிவாயில் தொழுகை விரிப்புகளை வைக்கக் கூடிய ஸ்டோர் ரூமாக மாறி விடும் என்றார். அங்கு எந்த தொழுகையாளிகளும் செல்ல மாட்டார்கள் என்றார். ஆனால் அவருடைய சொந்தக்காரர்கள் மட்டுமே அந்த பள்ளியில் தொழுதார்கள். ஆனால் நம்முடைய பள்ளியில் அல்லாஹ்வின் அருளால் தொழுகையாளிகள் அதிகமாயினர்.

அவர் எழுதுகின்றார்: ஜுமுஆ தொழுகையில் வருகை 200 முதல் 250 வரை இருக்கின்றது. சின்ன இடத்தில் இவ்வாறு நடக்கின்றது.

பிறகு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற சம்பவத்தை பெனினின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஆசியோன் என்ற கிராமத்தில் 200 பைஅத்துகள் நடைபெற்றன. இப்போது இந்த கிராமத்தில் ஒவ்வொரு ஜுமுஆ மற்றும் செவ்வாய்க்கிழமையன்ற தர்பிய்யத் வகுப்புகள் நடைபெறுகின்றன. அங்குள்ள சதர் சாஹிபின் மகள் வேறொரு கிராமத்தில் இருந்து வந்தார். அவர் மிக அதிகமாக நோயுற்றிருந்தார். நோயின் காரணமாக உடல் முற்றிலும் மோசமானதாகி விட்டது. கூறுகிறார். நான் அந்த கிராமத்திற்கு சென்ற போது சதர் சாஹிப் அவர்கள் என்னிடம் துஆ செய்யுமாறும் மேலும் காலத்தின் கலீஃபாவிற்கு துஆவிற்காக எழுதும் படியும் கூறினார்.

அவர் கூறுகிறார்: துஆவிற்காக எனக்கு எழுதப்பட்டது. மீண்டும் அந்த கிராமத்திற்கு சென்ற போது மக்கள் கூறினர். அந்த பெண்ணின் பேச்சு நின்று போனது. எந்த அசைவும் இருக்கவில்லை. அந்த பிள்ளையை மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றனர். எந்த சிகிச்சையிலும் பலன் கிடைக்கவில்லை. பிறகு அவநம்பிக்கை அடைந்து வீட்டிற்கு திரும்பி வந்து விட்டனர். ஒரு மவ்லவியை அழைத்தனர். அவர் ஊதினார். அதற்குப் பதிலாக அவர் 40000 ஃபிராங்க் தொகையும், ஒரு ஆட்டையும் பெற்றுக் கொண்டார். ஆனால் பிள்ளைக்கு சுகம் கிடைக்கவில்லை. இன்னொரு மவ்லவியையும் அழைத்தனர். அவரும் இதே போன்று ஒரு பெரிய தொகையை பெற்றுக் கொண்டார். பிறகும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: மவ்லவிகளிடமும் அவநம்பிக்கை அடைந்து இந்த பிள்ளை இனி இறந்தே போய்விடும் என்று எண்ணி தந்தையின் வீட்டில் விட்டு விட்டனர். அந்த பிள்ளையை இங்கு அழைத்துவந்த போது பிள்ளையின் தந்தை அங்குள்ள ஜமாஅத்திடம் துஆவிற்காக விண்ணப்பித்தார். எனக்கும் துஆவிற்காக எழுதினார்.

அவர் கூறுகிறார்: அதற்குப் பிறகு அந்த பிள்ளை அசைய ஆரம்பித்து விட்டது. அடுத்த

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

நாள் மாலைக்குள் நோள் முழுமையாக உடலை விட்டு போய் விட்டது. அந்த பிள்ளை உயிர் பிழைக்கும் என்று யாரும் எண்ணவேயில்லை. ஆனால் இப்போது அந்த பிள்ளையை பார்த்து அது நோய்வாய்ப்பட்டிருந்தது என்று யாராலும் கூற முடியாது. இதுவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய உண்மைக்கு சான்றாகும்.

புர்கினோஃபாஸோவின் முஅல்லிம் கரீம் சாஹிப் எழுதுகின்றார்கள்: தப்லீகிற்காக நாங்கள் ஒரு கிராமத்திற்குச் சென்றோம். தப்லீகிற்காக அனுமதி கேட்ட போது அந்த கிராமத்தின் இமாம் சாஹிப் கூறினார். உங்களது ஜமாஅத்தின் முபல்லிக் இதற்கு முன்பும் வந்துள்ளார். எங்களில் பெரும்பாலார் அப்போது பைஅத்தும் செய்தோம். ஆனால் முழு கிராமவாசிகளும் பைஅத் செய்யவில்லை. உங்களது தப்லீக் மூலமாக ஆரம்பத்தில் தப்லீக் செய்யாமல் இருந்து விட்ட சிலரும் இணைந்து விடலாம். இவ்வாறு நீண்ட நேரம் கேள்வி பதில் நடைபெற்றது. இறுதியில் கூறினர். நாங்கள் அஹ்மதிகளாக ஆகி இருந்தோம். ஆனால் பிறகும் கூட சில விஷயங்கள் தெளிவாகாமல் இருந்தது. ஆனால் இன்று இஸ்லாத்தை சரியான முறையில் எடுத்துக் கூறுகிறார்கள் என்றால் அது அஹ்மதிகளே ஆவார்கள் என்பதை கண்டு கொண்டோம். ஏனென்றால் நீங்கள் தொடர்ந்து இந்த பணியில் மூழ்கியுள்ளீர்கள். மேலும், நீங்கள் களைப்படைவதில்லை. எனவே, நாங்கள் உங்களோடு இருக்கின்றோம். இமாம் கிராமத்தினரிடம் கூறினார். யார் ஆரம்பத்தில் பைஅத் செய்யவில்லையோ அவர்கள் இப்போது பைஅத் செய்து விடுங்கள். இவ்வாறு கிராமத்தில் மேலும் 73 பேர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர்.

அல்லாஹ் இவர்களின் உள்ளத்தை திறக்கும் போது உண்மையான இஸ்லாத்தை ஏற்கின்ற நற்பாக்கியத்தை வழங்குகின்ற போது இது அல்லாஹ்வின் அருளாகும். ஏன் அவர்களோடு மட்டும் அவ்வாறு நடக்கின்றது என்றால் அவர்களுக்கு மார்க்கத்தின் மீது கவலை இருக்கின்றது. அவர்கள் முழு இரவும் அமர்ந்து மார்க்க சபைகளை கேட்கின்றனர். இவ்வளவு நீண்ட நேரம் அமர்வதற்கு இங்கு யாருக்கும் நேரம் இல்லை. மார்க்கத்திற்காக நேரம் வழங்குவதற்கும், மார்க்க சபைகளில் அமர்வதற்கும் கேள்வி பதில் நிகழ்ச்சிகளில் அமர்வதற்கும் நேரம் இல்லை.

இந்தியாவின் நாயிப் நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் எழுதுகின்றார்கள்: லக்கீம்பூர் என்கின்ற நகரில் அப்துஸ் ஸத்தார் சாஹிப் என்ற ஒரு நண்பரோடு மீண்டும் தொடர்பு ஏற்பட்டது. அவரை சந்தித்த போது தேம்பித் தேம்பி அழுதார். மேலும் அவர் கூறினார். நாங்கள் கிரன்பூர் கிராமத்தைச் சார்ந்தவர்கள் ஆவோம். எங்களிடம் 50 இடம் இருந்தது. நல்ல தொழில் இருந்தது. 12 வருடத்திற்கு முன்பு ஜமாஅத்தில் இணைந்தோம். ஆனால் பைஅத்திற்குப் பிறகு எந்தஅளவு எதிர்ப்பு வந்தது என்றால் எங்களுடைய வீட்டில் கல்லெறிந்தனர். மேலும் எங்களை எங்களுடைய வீட்டிலிருந்து வெளியேற்றினர். என்னுடைய மகனை அடித்து காயப்படுத்தினர். என்னுடைய மனைவியின் கையை அடித்து உடைத்து விட்டனர். எந்த அளவுக்கு எதிர்ப்பு வந்தது என்றால் நிலத்தையும் வீட்டையும் உடனடியாக விற்று விட்டு அங்கிருந்து வெளியேற வேண்டியது வந்தது. அனைத்து வியாபாரமும் பாதிப்படைந்து விட்டது. அங்கிருந்து லக்கீம்பூர் நகருக்கு வந்தோம். ஒரு சின்ன வீட்டில் குடியேறினோம். ஆனால் எதிரிகள் எங்களை பின்தொடர்வதை விடவில்லை. இங்கும் வந்து விட்டனர். மேலும் நகரின் முஸ்லிம்களிடம் எங்களுக்கெதிராக வெறுப்பை தூண்டினர். முழு நகரில் ஒரு முஸ்லிம் கூட எங்களோடு பேச மாட்டார்கள். வரும் போதும் போகும் போதும் துன்பம் இழைப்பார்கள். இந்நிலையில் எங்களுக்கு ஜமாஅத்தோடு தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது. ஆனால் அல்லாஹ் எங்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மைத்துவத்தில் ஒரு வலுவான அடையாளத்தை காட்டினான். எங்களை எதிர்ப்பதில் முன்னிலையில் நின்றவர்கள் ஒரு பேருந்தில் அமர்ந்து ஒரு திருமணத்திற்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களின் பேருந்து ரயில் தண்டவாளத்தில் சிக்கியதால் ரயில் மோதியதில் சம்பவ இடத்திலேயே 28 பேர் மரணமடைந்தனர். மேலும் அதில் உயிர் பிழைத்தவர்கள் கடுமையான காயத்திற்கு உள்ளானர். சடலங்களின் நிலைமை எந்த அளவுக்கு மோசமானதாக இருந்ததென்றால் அடையாளங்கூட காண முடியவில்லை. உடல் பாகங்கள் தொலை தூரம் வரை சிதறிக் கிடந்தன. எங்களுக்கு இந்த சம்பவம் பற்றி தெரிய வந்த போது காயமடைந்தவர்களை சந்திக்க மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது எதிரிகளின் உறவினர்கள் வெட்கி தலை குனிந்து எங்களிடமிருந்து முகத்தை மறைத்தனர்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு அதே நகரின் பெரிய பள்ளிவாயிலின் ஒரு மவ்லவி எஞ்சியிருந்த எதிரிகளிடம் கூறினார். அதாவது அப்துஸ் சத்தார் சாஹிப் அவர்களின் குடும்பத்தை பள்ளிவாயிலுக்கு அழைத்து அந்த மவ்லவி எதிரிகளிடம் கூறினார். நீங்கள் இந்த அஹ்மதிகளிடம் மன்னிப்பு கேளுங்கள். மேலும் அவர்களை எதிர்ப்பதை விட்டு விடுங்கள். மேலும் நீங்கள் இவர்களோடு தொடர்பை துண்டித்திருப்பதையும் விட்டு விடுங்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு எதிர்ப்பு முற்றிலும் குறைந்து விட்டது. கூறுகிறார். எங்களுக்கு ஜமாஅத்தோடு தொடர்பில்லாமல் இருந்தது. ஆனால் நாங்கள் உள்ளத்தால் அஹ்மதிகளாகவே இருந்தோம். இப்போது தொடர்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டிப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. மேலும் அவர்கள் அனைவரும் மீண்டும் பைஅத்தை புதிப்பிக்கவும் செய்தனர். இவ்வாறு மக்கள் உண்மையில் அஹ்மதிகளாகின்றனர். மேலும் புரிந்து அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு அல்லாஹ் ஈமானில் உறுதித் தன்மையையும் வழங்குகின்றான்.

கொசோவோவினுடைய முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஒரு புகழ்பெற்ற ஆலிம் அங்குள்ள பெரிய பள்ளிவாயிலின் இமாமாக இருந்தார். அங்குள்ள பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய பிரிவின் பேராசிரியராகவும் பணியாற்றினார். மேலும் நாட்டில் கனிசமான அளவு புகழ்பெற்றவராகவும் இருந்தார். அவர் பல வருடங்களுக்கு முன்பு ரேடியோ நிகழ்ச்சிகளில் ஜமாஅத்திற்கு எதிராக வெறுப்பை தூண்டும் விதமாக பேசி வந்தார். மேலும் இணைய தளத்திலும் ஜமாஅத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்தார். அல்லாஹ் எவ்வாறு பழிவாங்கினான் என்றால் முதலில் அவரின் ஒழுக்கத்தின் மீது ஆட்சேபனை எழுந்ததன் காரணமாக அவர் பல்கலைக்கழகத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார். பிறகு காவல்துறை அவர் தீவிரவாதிகளுக்கு உதவுவதாக கூறி கருப்புப்பணம் வைத்திருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டு சிறை பிடிக்கப்பட்டார். பல நாட்கள் சிறையில் வைக்கப்பட்டார். பிறகு ஜாமிஆ பள்ளிவாசலின் இமாம் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டார். அனைத்து பொறுப்புகளும் அவரிடமிருந்து திரும்ப பெறப்பட்டது. நாட்டில் வேறு சில இமாம்களும் ஜமாஅத்திற்கு எதிராக மக்களை தூண்டி வந்தனர். அதே ஆண்டில் மார்க்க ரீதியாக வெறுப்பை பரப்பிய குற்றத்தில் மேலும் சமூகத்தில் அமைதியின்மையை உருவாக்குகின்ற குற்றத்தில் அவர்களும் சிறை பிடிக்கப்பட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நாட்டிலுள்ள பெரும் ஆலிம்கள் இந்த அளவுக்கு சிறை பிடிக்கப்பட்டு இழிவுக்கு உள்ளானது என்பது இதற்கு முன்பு ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. இதன் காரணமாக அங்குள்ள அஹ்மதிகளுக்கு ஈமானில் உறுதிப்பாட்டை வழங்கினான்.

புதிய அஹ்மதிகளின் மீது அநீதி பிறகும் கூட ஈமானில் நிலைநிற்றல் தொடர்பான இந்தியாவின் ஒரு உதாரணத்தை இதற்கு முன்பும் எடுத்துக் கூறினேன். இதே போன்று இன்னொரு சம்பவம்


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National
Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family
restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு,
குனியமுத்தூர், கோவை–5.

உத்தரபிரதேசத்தினுடைய ஒரு கிராமத்தில் முழு கிராமமும் பைஅத் செய்திருந்தது. ஆனால் எதிர்ப்பின் காரணமாக முழு கிராமமும் பின் வாங்கி விட்டது. ஆனால் முஹம்மது ஹனீஃப் சாஹிப் என்ற ஒரு நண்பர் அஹ்மதிய்யதில் நிலைத்து நின்றார். எதிரிகள் அதிகமாக எதிர்த்தனர். இருப்பினும் கூட தனது ஈமானை பாதுகாத்து வந்தார். அதே எதிர்ப்பின் போது ஹனீஃப் சாஹிபின் மகன் வஃபாத் ஆகி விட்டார். எதிரிகள் அவருடைய மகனை கபருஸ்தானில் அடக்கவும் ஜனாஸா தொழ வைக்கவும் மறுத்து விட்டனர். நீ அஹ்மதிய்யத்தை விட்டு தவ்பா செய்தால் மட்டுமே நாங்கள் உன்னுடைய மகனின் ஜனாஸாவை தொழ வைப்போம். மேலும் அடக்கவும் இடமளிப்போம் என்றனர். ஆனால் ஹனீஃப் சாஹிப் உறுதியோடு நிலை நின்றார்கள். மேலும் தன்னுடைய குழந்தைகளோடு ஜனாஸா தொழ வைத்து தனது மகனை தனது வீட்டிலேயே அடக்கம் செய்தார்கள். அவர்களுக்கு மீண்டும் ஜமாஅத்தோடு தொடர்பு ஏற்பட்ட போது கண்ணீர் மல்கினார்கள். மேலும் குடும்பத்தோடு தங்களது பைஅத்தை புதுப்பிக்கவும் செய்தார்கள். நீங்கள் தலைமையத்தை ஏன் தொடர்பு கொள்ளவில்லை? என்று அவரிடம் கேட்ட போது கூறினார்கள், மக்கள் என்னிடம் லக்னோவில் இருந்த காதியானிகளின் தலைமையகம் இல்லாமலாகி விட்டது. அவர்களது மதரஸாவும் மூடப்பட்டு விட்டது என்றனர். எங்களுக்கு காதியானின் தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு ஈமானில் உறுதித்தன்மை இருந்தது. அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்ட வேண்டியது இருந்தது. அவர்களை நேர்வழியில் நிலைநிற்கச் செய்தான். ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் முகம் திருப்பி விட்டனர்.

ஜமாஅத்தின் காரணமாக அநீதியிழைக்கப் –படுதல் தொடர்பாக ஐவெரிகோஸ்டிலும் ஓர் உதாரணம் உள்ளது. புதிய அஹ்மதி பம்பா சீகோ சாஹிப் பைஅத் செய்த பிறகு தன்னுடைய சகோதரருக்கு கடிதம் மூலமாக அஹ்மதிய்யத் பற்றிய செய்தியை தெரிவித்தார். அதற்கு அவருடைய சகோதரர்கள் மூன்று நாட்களுக்குள் அஹ்மதிய்யத்தை விட்டு வெளியேற வில்லையென்றால் இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் அவருடைய தலை துண்டிக்கப்படும் என்று பதில் அளித்தனர். இதே போன்று தொழிலில் பங்காளியாக இருந்தவர். அவர் வஹாபி பிரிவைச் சார்ந்தவர். அவரும் இருவடைய பங்கை கொடுத்து தொழிலில் தொடர்பை துண்டித்துக் கொண்டார். ஆனால் அன்னார் எந்த இழப்பையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தவில்லை. மேலும் உறுதியோடு அஹ்மதிய்யத்தில் நிலைத்து நின்றார்.

பிரான்ஸின் அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது அல்லாஹ்வின் அருளால் MTA மூலமாக உலகை தொடர்பு கொள்வதற்கான ஒரு ஏற்பாடு கிடைத்துள்ளது. என்னுடைய குத்பா எல்லா இடங்களுக்கும் செல்லும் போது அதை அந்நியர்களும் கேட்கின்றனர்.

அதன் தாக்கம் தொடர்பான சம்பவத்தை அமீர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: தானியால் சாஹிப் என்ற ஒரு நபர் ஜமாஅத்தில் இணைந்தார். அவர் கூறுகின்றார். பைஅத்திற்கு முன்பு மயோபி தீவில் இருந்து வந்தார். அது ஃபிரான்ஸின் ஒரு தீவாகும். அங்கு மயோட்டில் எந்த பள்ளிவாசலுக்கு சென்று வந்தாரோ அந்த பள்ளிவாசலின் இமாம் பெரும்பாலும் MTA –வில் எனது குத்பாவை கேட்டு வந்துள்ளார். கூறுகிறார். குத்பாவில் நான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக எடுத்துக் கூறினேன். அதைக் கேட்டு நான் அதிக தாக்கத்திற்கு உள்ளானேன். மஸ்ஜிதின் இமாம் இவருக்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தை எடுத்துக் கூறினார். அந்த இமாம் நல்லவராக இருந்திருக்கின்றார். அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டுவதற்கு நீங்கள் துஆ செய்யுங்கள் என்று கூறினார். இந்த விஷயங்கள் என்னை நல்ல தாக்கத்திற்கு ஆளாக்கியது. மேலும் இமாம் சாஹிப் அவர்கள் ஜமாஅத் தொடர்பாக விஷயங்களை ஒன்று சேர்க்குமாறும் கூறினார். எனவே நான் இணைய தளத்தில் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக செய்திகளை சேகரிக்க ஆரம்பித்த போது பிரன்ச் மொழியில் ஜமாஅத்தின் ஒரு காணொலி என் முன்னால் வந்தது. அது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக இருந்தது. அதே போன்று யுடியூபில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பான குத்பா பிரன்ச் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டதும் கிடைத்தது. அவ்வாறு நான் பைஅத்தும் செய்தேன்.

அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அந்த நபர் ஃபிரான்ஸின் முபல்லிக் இன்சார்ஜை மயூட் தீவிலுள்ள அந்த அஹ்மதியல்லாத இமாமை சந்திக்க வைத்தார். அந்த இமாமிற்கு பிரன்ச் மொழியில் ஜமாஅத்தின் புத்தகங்கள் வழங்கப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் அந்த இமாமும் கூட 70 நபர்களோடு ஜமாஅத்தில் இணைந்து விட்டார். அல்லாஹ் அருள் செய்தான். ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் ஒரு சிறிய தீவில் அமர்ந்திருக்கக்கூடியவருக்கு குத்பாவின் மூலமாக தப்லீக்கின் பணி நிகழ்ந்துள்ளது. இதுவும் அல்லாஹ் MTA –வின் வடிவில் நம்மீது செய்திருக்கக்கூடிய மாபெரும் பேருபகாரமாகும்.

புத்தகங்கள் மூலமாக எவ்வாறு தாக்கம் ஏற்படுகின்றது என்பது தொடர்பான சம்பவம். காங்கோ பிராஸிலிலிருந்து எழுதுகிறார். ஒரு புதிய அஹ்மதி தன்னுடைய பைஅத்தின் சம்பவத்தை கூறினார்: ஒரு நாள் நான் எனது இளைய சகோதரரின் வீட்டிற்கு சென்றேன். அவரிடத்தில் நான் பிரன்ச் மொழியில் ஒரு புத்தகத்தை கண்டேன். அந்த நூலின் பெயர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் உண்மைக் கதைகள் என்பதாகும். நான் அதை படிப்பதற்காக வாங்கிக் கொண்டேன். என்னுடைய பாதிரியாரிடம் இந்த புத்தகம் தொடர்பாக கூறினேன். அப்போது அந்த பாதிரி இவ்வாறு சிந்திக்காமல் இது போன்ற புத்தகங்களை படிக்கக்கூடாது என்றார். ஈமான் வீணாவதற்கான அபாயம் இருக்கின்றது என்றார். ஆனால் நான் அந்த புத்தகத்தை படித்த போது எனது கண்கள் திறந்தன. மேலும் பாதிரியார்கள் நம்மிடம் பலவற்றை மறைக்கின்றனர் என்பதை நான் புரிந்து கொண்டேன். நான் மீண்டும் புத்தகத்தை படித்தேன். பைபிளின் சான்று –களையும் பரிசீலித்தேன். நான் எனது சகோதரரை தொடர்பு கொண்டு புத்தகம் தொடர்பாக இது எங்கிருந்து பெற்றீர்கள்? இவர்கள் யார்? என்று வினவினேன். என்னுடைய சகோதரர் முன்பிருந்தே அஹ்மதியாக இருந்தார். அவர் என்னிடம் கூறினார். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் புத்தகமாகும். நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸிற்கு செல்ல வேண்டியுள்ளது. ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடைபெற உள்ளது என்றார். நீயும் என்னோடு வந்து இவர்கள் யார் என்று அறிந்து கொள் என என்னிடம் கூறினார். அங்கு வந்து ஏதேனும் கேள்விகள் இருந்தால் கேட்டுக் கொள் என்றார். எனவே நாங்கள் மிஷன் ஹவுஸிற்கு சென்றோம். அங்கு ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சூழலை கண்டோம். உங்களுடைய குத்பாக்களை கேட்டோம். முற்றிலும் மாறி விட்டோம். அல்லாஹ்வின் அருளால் ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டின் போதே பைஅத் செய்து விட்டேன் என்றார்.கூறுகிறார். நான் மிகவும் மகிழச்சி அடையந்தேன். வாழ்க்கையின் நோக்கம் இப்போது பூர்த்தி அடைந்திருக்கின்றது. பைஅத்திற்குப் பிறகு மக்களிடத்தில் அசாதாரணமான மாற்றங்களும் நிகழ்கின்றன.

உஸ்பகிஸ்தானின் ஒரு புதிய அஹ்மதி நண்பர் ஸகீர் வாஹிது சாஹிப் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சூரா ஃபாத்திஹாவின் விளக்க உரையை அறிந்த பிறகு தொழுது வந்த முறை முற்றிலும் மாறி விட்டது. இதற்கு முன்பு தொழுகையில் கிடைக்காதது இப்போது எனக்கு கிடைக்கின்றது. குறிப்பாக இந்த ஹதீஸ் எனக்கு புரியாமல் இருந்தது. ஆனால் இப்போது அது எனக்கு தெளிவாகி உள்ளது. அதாவது இஹ்ஸான் என்கின்ற வார்த்தையின் பொருள் புரிய வந்துள்ளது.

கொஸோவோவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: புதிய அஹ்மதிகள் கலப்பற்ற தன்மையிலும், தியாகத்திலும் நாள் தோறும் முன்னேறி வருகின்றனர். நஸீர் சாஹிப் என்கின்ற ஒரு நண்பர் நகராட்சியில் ஒரு முக்கியமான துறையில் பணியாற்றுகின்றார். ஆனால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நேரமின்மை இருந்தாலும் கூட இரவு பகலாக ஜமாஅத்திற்கு தொண்டாற்றுகின்றார். என்ன

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

தர்பிய்யத் நிகழ்வாக இருந்தாலும் அதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றார். பக்கத்து நாட்டில் வக்ஃபே ஆர்ஸி செய்வதற்கும் தயாராக இருக்கின்றார். அன்னாரது தப்லீக்கின் மூலமாக நிறைய தப்லீக் தொடர்புகள் ஏற்பட்டுள்ளது. ஒரு முறை தப்லீக் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அன்னார் கடுமையாக நோயுற்றிருந்தும் தப்லீக் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சியின் நடுவே அதிக பலகீனத்தை உணர்ந்த போது வீட்டிற்கு சென்று செவிலியரான தனது மனைவியிடம் டிரிப் ஏற்றும்படிகூறி உடல்நிலை சற்று சீரானதும் மீண்டும் தப்லீக் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். இப்போது வரை அவர் தப்லீக் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வருகின்றார்.புதிதாக இணைகின்றவர்களிடம் தப்லீக் செய்வது தொடர்பாக இப்படிப்பட்ட உத்வேகம் காணப்படுகின்றது.

காங்கோ பிராஸினின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு கிராமத்தில் ஒருவர் கூறினார். என்னுடைய மருமகனின் நடத்தை சரியில்லை. அவர் மாலை வேளையில் மது அருந்தி விட்டு ஏசிப் பேசி வந்தார். என்னோடு தகாத வார்த்தைகளால் பேசுவார். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் மது அருந்துவதையும் ஏசிப் பேசுவதையும் முற்றிலும் விட்டு விட்டார். இது எனக்கு மிகவும் வியப்பிற்குரிய விஷயமாக இருக்கின்றது. இவ்வாறு அல்லாஹ் மாற்றங்களை ஏற்படுத்துகின்றான்.

புர்கினோ ஃபாஸோவின் புதிய அஹ்மதி நண்பர் கூறுகின்றார்கள்: நான் அஹ்மதி அல்லாதவனாக இருந்த போது பல்வேறு கஷ்டங்களில் சிக்கித் தவித்தேன். எனக்கு குழந்தைகள் பிறந்தது. ஆனால் மரணித்துப் போயின. நான் ஃபக்கீர்மார்களிடமும், பீர்மார்களிடமும் சென்றேன். ஒருவர் ஆட்டை கொண்டு வா என்றும் ஒருவர் கோழியை கொண்டு வா என்றும், பலி கொடுக்க வேண்டும் என்றும் கூறினர்.

அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை கேட்ட போது எனக்கு பிடித்திருந்தது. மேலும் இந்த ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். மேலும் மவ்லவிமார் –களுக்கும் சிலைகளுக்கும் காணிக்கையாக வழங்கி வந்த தொகையை சந்தாவாக கொடுக்க ஆரம்பித்தேன். என்னுடைய அனைத்து பிரச்சனைகளும் தீர்ந்ததை கண்டேன். அல்லாஹ் எனக்கு உயிருள்ள சந்ததிகளையும் வழங்கினான். இந்த நபர் நம்மிடம் வருவதில்லை என்பதை கண்ட மவ்லவிகள் மேலும் நான் அஹ்மதியாகி விட்டேன் என்பதை அறிந்ததும் உங்களுடைய மூதாதையரின் ஏன் விட்டீர்? என்று கேட்டனர். அதற்கு நான் கூறினேன். இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். உயிரோடிருக்கக் கூடிய குழந்தைகளை அல்லாஹ் வழங்கி இருக்கின்றான். நான் சந்தா வழங்குகின்றேன். அல்லாஹ் இரட்டிப்பாக அதை திருப்பி தருகின்றான். இது அனைத்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பரக்கத்தாகும். இறைவன் என்னுடைய வீட்டின் நிலையை மாற்றி விட்டான். நான் செய்கின்ற பணி முழுமையடைகின்றது. எனவே அல்லாஹ் தான் என்னை இந்த வழியில் நடத்தி இருக்கின்றான். மூதாதையர்களின் பாதை தவறாக இருந்திருக்கின்றது.

ரேடியோ மூலமாக பைஅத்துகள் நிகழ்கின்றன. பெனினின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு கிராமத்திலிருந்து ஒரு கிருத்தவ நண்பர் நமது ரேடியோ நிகழ்ச்சியின் போது போன் செய்து ஹஸ்ரத் ஈஸா நபியின் வருகை தொடர்பாக கேள்வி கேட்டார். மேலும் எங்களை வருமாறும் அழைத்தார். அவரை சந்தித்த பிறகு அவருடைய கேள்விகளுக்கு பதிலளித்தோம். மேலும் அறிவு சார்ந்த சான்றுகள் மற்றும் பைபிளின் சான்றுகள் மூலம் பதில் அளிக்கப்பட்டது. அல்லாஹ்வின் அருளால் அவரது உள்ளம் திறந்தது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கொள்கை சரியானது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஒரு நபியாகவே இருந்தார்கள். மேலும் அவர்களின் இரண்டாம் வருகை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக முழுமையடைந்து விட்டது என்பதை ஒப்புக் கொண்டார். இது அவருக்கு புரிந்ததும் இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். பேசிக் கொண்டிருந்த போது அவர் கூறினார். நீண்ட காலமாக அவர் ஆர்வமோடு நமது நிகழ்ச்சியை கேட்டு வந்துள்ளார். திங்கட்கிழமையும் வியாழக் கிழமையும் நமது ரேடியோ நிகழ்ச்சிக்கு முன்பாக தமது பணிகளை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து விடுவார்.

அல்லாஹ் கூறியதுபோன்று தேடல் இருக்குமென்றால் அல்லாஹ் வழிகாட்டவும் செய்கின்றான்.

பொலிவியாவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: வில்லியம் சாஹிப் ஒரு கிருத்தவ பிரிவின் பாதிரியாராக இருந்தார். அவர் லெபனானை சார்ந்தவர். பிறப்பால் கிருத்தவர். கடந்த மூன்று ஆண்டுகளாக பொலிவியாவில் வசித்து வருகிறார். நான் அந்த கிருத்தவ பிரிவை பற்றி தெரிந்து கொள்வதற்காக அன்னாரோடு ஒரு சந்திப்பிற்கான ஏற்பாட்டைச் செய்தேன். எங்களுடைய முதல் சந்திப்பில் அவர் தன்னுடைய பிரிவை பற்றி கூறுவதற்கு பகரமாக அவர் என்னிடம் இஸ்லாம் அஹ்மதிய்யத் தொடர்பாக கேள்விகளை கேட்க ஆரம்பித்தார். அந்த சந்திப்பில் ஜமாஅத்தின் கொள்கைகள் எடுத்துக் கூறப்பட்டது. குறிப்பாக ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. நான் அவருக்க ஜுமுஆ வில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தேன். அவர் தொடர்ந்து ஜுமுஆவிற்கு வர ஆரம்பித்தார். ஒவ்வொரு முறையும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவரோடு ஒரு விரிவான உரையாடல் நடைபெறும்.

வில்லியம் சாஹிப் அவர்களுக்கு அவர்கள் அஹ்மதியாகி விட்டால் அவருடைய சர்ச்சை சேர்ந்தவர்களும் பெற்றோர்களும் கோபம் அடைவார்கள் என்ற கவலை இருந்தது. மேலும் தனக்கென்று ஒரு புதிய வேலையை தேட வேண்டியது வரும் என்ற கவலையும் இருந்து வந்தது. ஆனால் மறுபக்கம் உண்மையை தேடுவதற்கும் முக்கியத்துவம் வழங்கி வந்தார்கள். அவரால் அரபி புரிய முடிந்தது. எனவே ஜமாஅத் வெப் சைட்டில் அரபி புத்தகங்களை படிக்க ஆரம்பித்தார். படித்த பிறகு கூறினார். அவர் நீண்ட நாட்களாக உண்மையை தேடி வந்தார். இப்போது அவருக்கு உண்மை கிடைத்து விட்டது. எனவே உலக எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

பைஅத் செய்தாலும் செய்யாவிட்டாலும் தூதுச் செய்திக்கு மக்களிடம் நல்ல தாக்கம் ஏற்படுகின்றது என்பது தொடர்பான ஒரு சம்பவத்தை காம்ரான் முபஷ்ஷிர் சாஹிப் ஆஸ்திரேலியாவிலிருந்து எழுதுகின்றார்கள்: நாங்கள் வீடு வீடாக சென்று தப்லீக் செய்வதற்கான திட்டம் தீட்டினோம். ஒரு வீட்டின் கதவை தட்டிய போது உள்ளே இருந்து ஒரு மனிதர் கோபத்தால் நடுங்கியவாறு வந்தார். அவர் என்னைத் தாக்கி விடுவாரோ என்கின்ற அளவிற்கு வந்தார். அதே கோபத்தின் நிலையில் அவர் என்னிடம் கூறினார். முஸ்லிம்களாகிய நீங்கள் இந்த நாட்டில் வந்ததிலிருந்து எங்களது நாட்டின் அமைதி சீர்குலைந்து போய்விட்டது. நீங்கள் எங்களுடைய நாட்டை விட்டு வெளியேருங்கள். நீங்கள் எங்களோடு ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியாது. நாங்கள் விரும்பவும் இல்லை. அவர் பேசி முடித்ததும் நான் அவரிடத்தில் கூறினேன். நீங்கள் கூறுவது சரிதான். சில முஸ்லிம்கள் தீவிரவாதிகளாக இருக்கின்றார்கள். இஸ்லாத்தை தவறான முறையில் எடுத்து வைக்கின்றனர். ஆனால் எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்பதே எங்களது போதனையாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லா வகையிலும் எந்த நாட்டிற்கு சென்றாலும் அங்கு ஒருமைப்பாட்டுடன் இருக்கின்றது. எங்களுடைய குழந்தைகள் விளையாடுகின்றார்கள். ஃபுட் பால் கிளப்களிலும் உள்ளனர். நான் இங்கு புதிதாக வந்துள்ளேன். இங்குள்ள நூலகத்தின் உறுப்பினராக உள்ளேன்.

எவ்வாறிருப்பினும், இதுபோன்ற விஷயங்களைக் கூறிய போது முதலில் கோபத்தால் நடுங்கிய அந்த நபர் மேலும் இவர் நம்மை தாக்கி விடுவாரோ எனும் அளவிற்கு கோபம் கொண்டிருந்தவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மேலும் உங்களோடு நான் புகைப்படம் எடுக்க விரும்புகிறேன் என்றார். இறுதியில் நான் அவரை மிஷன் ஹவுஸிற்கு வருமாறு அழைத்தேன். அழைப்பை மகிழச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

அவர் எழுதுகின்றார்: அல்லாஹ்வுடைய மாபெரும் அருள் என்னவென்றால் அவன் ஜமாஅத்தின் தூதுச் செய்திக்காக மக்களின் உள்ளங்களை மென்மையாக்குகின்றான். நான் கடந்த ஒரு குத்பாவில் Asylum Seekers தப்லீக் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தேன். ஜெர்மனியை சேர்ந்த ஒரு Asylum Seeker விண்ணப்பித்திருந்தார்.

அவர் கூறுகிறார்: ஒரு நீதிபதியிடம் Final Protocal இருந்தது. அவர் என்னிடம் நீ உங்களுடைய ஜமாஅத்தின் பிரசுரங்களை விநியோகிக்கின்றீரா? என வினவினார். அதற்கு நான் ஆமாம். நான் பிரசுரம் விநியோகிக்கிறேன் என்றேன். அதற்கு அந்த நீதிபதி எந்த பகுதியில் பிரசுரம் விநியோகிக்கின்றீர்? என்று கேட்டார்.

அதற்கு நான் சில இடங்களின் பெயர்களை கூறினேன். அப்போது அந்த நீதிபதி, இன்ன இடத்தில் நானும் அந்த பிரசுரத்தை பெற்றுக் கொண்டேன். எனவே நான் உன்னுடைய கேஸை பாஸ் செய்கின்றேன். நீ செல் என்று கூறினார். இவ்வாறு தப்லீக்கும் கூட அவருக்கு சாதாமான தீர்ப்பை பெற்றுத் தருவதற்கு காரணியாக இருக்கின்றது.

மீண்டும் ஆஸ்திரேலியாவின் சம்பவம். காம்ரான் சாஹிப் கூறுகிறார்கள். அங்குள்ள இளைஞர்களுக்கு சற்று தயக்கம் இருக்கின்றது. சில பணிகள் செய்வதற்கு வெட்கப்படு –கின்றார்கள். இங்குள்ள மக்கள் நம்மை என்ன நினைப்பார்கள்? என நினைக்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் எந்த அளவுக்கு ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டுள்ளதென்றால் எந்த அளவுக்கு மக்கள் ஜமாஅத்தை அறிந்துள்ளனர் என்றால் இங்குள்ள இளைஞர் –களுக்கு அந்த தயக்கம் இப்போது இல்லை. ஆனால் சில இடங்களில் அது இருக்கின்றது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஆஸ்திரேலியாவில் குத்தாமுல் அஹ்மதியாவோடு ஒரு தப்லீகிற்கான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் குத்தாம்கள் ஜமாஅத்தின் T-Shirt –ஐ அணிந்து வர வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது ஒரு இளைஞர் என்னிடம் வந்து எனக்கு ஜமாஅத் Shirt அணிய வெட்கமாக உள்ளது என்றார். அப்போது நான் அவருக்கு புரிய வைத்தேன். நீங்கள் அணிந்து கொண்டு செல்லுங்கள். அதன் காரணமாகவே மக்கள் உங்களிடத்தில் வருவார்கள். அல்லாஹ்வின் அருளால் அவ்வாறே நிகழ்ந்தது. குத்தாமுல் அஹ்மதிய்யாவின் அந்த குழு வெளியே சென்ற போது மக்கள் எங்களை புகைப்படம் எடுக்க ஆரம்பித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் எங்களை நேர்காணலும் செய்தனர். மேலும் தப்லீக்கிற்கான வழிகள் திறந்தன. அதே இளைஞர் தனது நண்பர்களிடம் கூறினார். ஆரம்பத்தில் எனக்கு ஜமாஅத்தின் Shirt –ஐ அணிய வெட்கமாக இருந்தது. ஆனால் அனைத்து அருள்களும் ஜமாஅத்தின் பெயரிலேயே உள்ளது என்பதை இப்போது நான் உணர்ந்து கொண்டேன் என்றார்.

இவ்வாறு அல்லாஹ் இளைஞர்களுக்கு தப்லீக்கின் மூலமாக தர்பிய்யத்திற்கான ஏற்பாட்டையும் செய்கின்றான்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இவ்வாறு கூறினான். ஆன மன் துஆன வ துஃரஃபூ பைனன் நாஸ். இதை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: ஒரு காலம் வரும். உனக்கு உதவப்படும். மேலும் நீ மக்களால் அடையாளங் கண்டு கொள்ளப்படுவாய். இந்த விஷயத்தை அல்லாஹ் அன்னாருக்கு 1883 ஆம் ஆண்டு இல்ஹாம் மூலமாக தெரிவித்தான். அதற்கு பிறகும் இரண்டு முறை இல்ஹாமாக வந்தது. அப்போது அன்னாரை எவரும் அறிந்ததில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: இது மனிதனின் வேலையாக இருக்க முடியுமா? அல்லது திட்டமாக இருக்க முடியுமா? ஒருபோதும் இல்லை. இது அல்லாஹ்வின் பணியாகும். அவன் சம்பவத்தைப் பற்றி முன்பே தெரிவிக்கின்றான். அவனே மறைவானவற்றை அறியக்கூடியவனாவான். அவனால் அந்த செய்தியை வழங்க முடியும்.

அன்னார் கூறினார்கள்: ஒவ்வொரு நாளும் இந்த அடையாளம் நிறைவேறுகின்றது. அதாவது அன்னாரைப் பற்றிய அறிமுகம் உலகில் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அன்னாரின் பைஅத்தில் வருகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: உனக்கென்று ஒரு காலம் வரும். அப்போது நீ முழு உலகிலும் புகழ் பெறுவாய் என்று அல்லாஹ் செய்தி அறிவிக்கின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 162-163; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அது அவ்வாறே நிகழ்கின்றது.

இன்று நாம் பார்க்கின்றோம். அதே போன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பெயரும், ஜமாஅத்தின் பெயரும் உலகில் பரவுகின்றது. ஒரு தொலை தூரத்து பகுதியின் குரல் இன்று உலகின் எண்ணற்ற நாடுகள் வரை சென்றடைந்து விட்டது. 210 நாடுகள் வரை சென்றடைந்து விட்டது. நாடுகள் தொடர்பாக ஒரு விஷயத்தை கூறி விடுகிறேன். ஜமாஅத்

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்..... (49:12)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில், சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக் -கொருவர் புறங்கூறாதீர்கள்.... (49:13)*

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தங்கள் செல்வத்தை மக்களுக்குக் காட்டுவதற்காகச் செலவு செய்வோரும், அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், நம்பிக்கை கொள்ளாதவரும் (ஷய்த்தானின் கூட்டாளியாவர்.).... (4:39)*

**முஹம்மது ஹுஸைன்**

பழனி

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப்போல)க் கொடுக்கவும், கட்டளையிடுகின்றான்... (16:91)*

**ஜோதி அஸ்டின்**

மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*தீயவற்றைப் பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆயினும் அநீதிக்கு ஆளானவரைத் தவிர. (அவர்கள் அநீதியை வெளியிடலாம்). அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (41:49)*

**அன்னல் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் அல்லாஹ்விடம் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை உங்கள் பொறுப்பாளியாக்கிச் சத்தியங்களை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை முறிக்காதீர்கள். நிச்சயமாக, அல்லாஹ் நீங்கள செய்பவற்றை நன்கறிகின்றான். (16:92)*

**பீ.ஜே. சுலைமான்**

மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்கின்றவர்களுக்கு, மன்னிப்பும் மகத்தான நற்பலனும் (விதிக்கப்பட்டு) உள்ளனவென்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். (5:10)*

**S. முஹம்மது இஸ்மாயீல்**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர் களாயிருங்கள்.... (4:136)*

**S.H. வஸீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

# அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம்

✪ ✪ ✪ மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித் (இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயிலின் இமாம்) ✪ ✪ ✪

*(மூன்றாம் பாகம்)*

**பொருள் தியாகம் தொடர்பான ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய முன்னுதாரணங்கள்:**

மனிதனை அல்லாஹ் எவ்வாறு படைத்துள்ளான் என்றால் சில நேரங்களில் அவன் இறைவனின் கூற்றுக்களைக் கேட்டு எத்தகைய தாக்கத்திற்கு ஆளாகின்றான் என்றால் திடீரென்று ஒரு நொடியில் அவனிடம் பெரும் மாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொடர்பாக كانوا وقافا عند القرآن அதாவது, அவர்கள் திருக்குர்ஆனின் வசனங்களைக் கேட்டவுடனேயே உடனடியாக அதற்கு கட்டுப்பட்டவர்களாக நின்று விடுவார்கள் என்று வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِن قَبْلِهِ الرُّسُلُ முஹம்மது ஒரு தூதரையன்றி வேறல்ல. அவர்களுக்கு முன்னுள்ள எல்லா தூதர்களும் மரணமடைந்து விட்டனர் (3:145) என்ற வசனத்தை ஓதியதைச் செவியுற்றதும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது நிலை எவ்வாறு இருந்தது? உருவிய வாளுடன் நின்றவர்களது கைகளிலிருந்து வாள் கீழே விழுந்து விட்டது. அவர்களால் நிற்கக்கூட முடியவில்லை.

சில நேரங்களில் இவ்வாறும் நிகழ்ந்திருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு கூற்று காதில் விழுகின்றது. அதனால் வாழ்வில் ஒரு மகத்தான புரட்சி ஏற்பட்டு விடுகின்றது. தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த ஒரு நபித்தோழரின் காதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் 'உட்காருங்கள்' என்ற குரல் கேட்கின்றது. நேரடியாக அவர்களைப் பார்த்து பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறவுமில்லை. ஆனால் அவரோ தெருவிலேயே உட்கார்ந்து விடுகின்றார்.

மதுகோப்பைகள் நபித்தோழர்களுக்கு இடையில் சுற்றி வந்து கொண்டிருந்த சமயத்தில் மது இன்றிலிருந்து ஹராமாக்கப்பட்டு விட்டது என்று அறிவிப்பு செய்யப்படுவது காதில் விழுகின்றது. போதை மிகைத்திருந்த நிலையிலும் கூட ஒரு நபித்தோழர் எழுந்தார். தடியால் மது வைக்கப்பட்டிருந்த பானைகளை உடைத்தெறிந்தார். உண்மையில், உண்மையான நன்மையின் ஒவ்வொரு கனத்திலும் கட்டுப்படுதலின் இந்த தகுதியைத்தான் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் பெற வேண்டும். இந்த நோக்கத்தை அடைய வேண்டும் என்பதற்காகவே தர்பிய்யத் சொற்பொழிவுகளில் திருக்குர்ஆன் வசனங்கள், நபிமொழிகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள் எடுத்துக் கூறப்படுகின்றது. அவற்றின் அருளால் நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளங்களில் ஒரு தூய மாற்றமும் தூண்டுதலும் உருவாகின்றது.

சில நேரங்களில் செயலளவிலான முன்மாதிரிகளைக் கண்டு மனிதன் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகின்றான். அதனால் ஏற்படும் நல்ல விளைவை ஏற்றுக் கொள்கின்றான். இயல்பிலேயே மனிதன் முன்மாதிரியின் தேவையை உடையவனாக இருக்கின்றான். மற்றவர்களின் நல்ல முன்மாதிரியின் மூலமாக அவனது உள்ளத்திலும் நன்மை செய்ய வேண்டும் என்ற விருப்பங்கள் விழித்தெழுகின்றன. அவனையும் அவர்களைப் போன்றே தியாகங்கள் செய்வதற்கு அவை ஆயத்தப்படுத்துகின்றன. மற்றவர்களின் நல்ல முன்மாதிரியிலிருந்து அறிவுரையைப் பெறக்கூடியவர் உண்மையில் மிகவும் நற்பாக்கியம் பெற்றவராக இருக்கின்றார் என்று பெருமானார் (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். இந்த ஞானம் நிறைந்த விதிமுறையின் அடிப்படையில் பொருள் தியாகங்கள் தொடர்பான சில முன்னுதாரணங்களை உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன். நான் கூறும் விஷயங்கள் ஒருவேளை எவரது உள்ளத்திலாவது பதிந்து விடும் என்ற நம்பிக்கையுடனும் துஆவுடனும் அவற்றை நான் இப்போது எடுத்து வைக்கின்றேன்.

**ஆரம்ப நூற்றாண்டுகளின் முன்னுதாரனங்கள்:**

முஹம்மது (ஸல்) அவர்களது ஒளியை தமது கண்களால் காணும் நற்பேற்றைப் பெற்ற நபித்தோழர்கள் ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களது முன்னுதாரணங்களை ஆரம்பத்தில் எடுத்துக் கூறுகின்றேன். நபித்தோழர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது நட்பிலிருந்து அருளைப் பெற்றனர். மேலும், அன்னாரது வழிகாட்டல்களை தமது வாழ்க்கையின் ஒரு பகுதியாக அவர்கள் ஆக்கிக் கொண்டனர். அதன் காரணமாக அவர்கள் அனைவருமே நேர்வழியின் வானத்தில் நட்சத்திரங்களைப் போன்று மின்னுவதை நாம் பார்க்க முடிகின்றது. இந்த நற்பாக்கியம் பெற்ற நபித்தோழர்களிடத்தில் இறைவன் திருப்தி அடைந்தான். அவர்களும் இறைவனிடத்தில் திருப்தி அடைந்துள்ளனர். அவர்களது முன்மாதிரியை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்றென்றும் பின்பற்றத்தக்க முன்மாதிரி என்று கூறியுள்ளார்கள்.

அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வது தொடர்பான சம்பவங்களால் இஸ்லாமிய வரலாறு நிறைந்து காணப்படுகின்றது. நபித்தோழர்கள் இந்த இஸ்லாமிய போதனைக்கு ஏற்ப தமது உள்ளத்தாலும் உயிராலும் எவ்வாறு செயல்பட்டனர் என்றால், உலக வரலாற்றில் அதற்கு இணையான ஒன்றை பார்க்க முடியாது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு போரின் சந்தர்ப்பத்தில் தன்னிடமிருந்த செல்வத்தில் பாதி பகுதியைக் கொடுத்து விட்டார்கள். மேலும், இந்த கனத்தில் நான் எல்லாரையும் விட முன்னேறிச் சென்று விட்டேன் என்று கருதினார்கள். சிறிது நேரம் கழிந்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களிடமிருந்த செல்வம் முழுவதையும் தங்களது அன்பான எஜமானரான பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டார்கள். அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வதையும், அவ்வழியில் முன்னேறிச் சென்றவாறு நபித்தோழர்கள் செய்த உள்ளத்தை கொள்ளை கொள்கின்ற தியாகங்களையும், நபித்தோழர்கள் அவர்களது மற்றும் நமது அன்பான எஜமானரான, முழு உலக ஆசிரியருமான ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களிடம் இருந்தே கற்றுக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள்தான் அவர்களது உள்ளத்திற்கு ஆன்மீகத் தூய்மையை வழங்கினார்கள். பிறகு, அன்னார் அவர்களது உள்ளங்களில் இறை வழியில் தமது செல்வங்களைத் தயக்கமின்றி செலவு செய்வதற்கான விதையை விதைத்தார்கள். இந்த விதை கனிகளைத் தந்து, அல்லாஹ்வின் வழியில் பொருள் தியாகம் செய்வது மற்றும் தமது பொருளை இவ்வழியில் அர்ப்பணிக்கின்ற அந்த காட்சியையும் தமது கண்களால் காண்கின்ற போது பெருமானார் (ஸல்) அவர்களது அருளுக்குரிய முகம் மகிழ்ச்சியால் மலர்ந்து காணப்பட்டது. செழித்து வளர்கின்ற தனது வயலைப் பார்க்கின்ற ஒரு விவசாயி மகிழ்ச்சியால் திளைத்திருப்பது போன்று பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து விடும். இதற்கான ஓர் உதாரணத்தை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் ஜரீர் (அலை) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒரு ஏழை சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் வந்திருந்தனர். அவர்கள் வெறுங்காலுடனும் ஆடைகள் அணியாத உடலுடனும் காணப்பட்டார்கள். அவர்களின் இந்த நிலைமையைப் பார்த்து ரஸூலே கரீம் (ஸல்) அவர்களது முகம் மாறி விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை ஒன்று திரட்டி அவர்களிடையே சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அப்போது நபித்தோழர்கள் தீனார், திர்ஹம், ஆடைகள், வாற்கோதுமை மற்றும் பேரீத்தம் பழங்களை சதகாவாகக் கொடுத்தார்கள். எதுவரை என்றால், ஆடைகள் மற்றும் தானியங்களின் இரண்டு குவியல்கள் ஒன்று சேர்ந்தன. ஹஸ்ரத் ஜரீர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் முகம் இந்த காட்சியைக் கண்டு தங்கக் கட்டியைப் போன்று ஒளி வீசியது. (சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஸகாத் பாபுல் ஹிப்பி அலஸ் ஸதக்கதி)

لَن تَنَالُوا الْبِرَّ حَتَّىٰ تُنفِقُوا مِمَّا تُحِبُّونَ நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருளை (இறைவனுக்காக) செலவு செய்யாத வரை ஒருபோதும் முழுமையான நன்மையை அடைய முடியாது.(3:93) என்ற திருக்குர்ஆன் வசனம் இறங்கிய பிறகு சஹாபாக்களின் நடைமுறையை நாம் பார்க்கின்ற போது அவர்கள் தங்களுக்கு மிகவும் பிரியமான ஒவ்வொரு பொருளையும் இறைவனின் வழியில் தியாகம் செய்வதற்கு முடிவெடுத்திருந்தது தெரிய வருகின்றது.

மதீனாவிலுள்ள அன்ஸார்களில் எல்லாரையும் விட அதிக தோட்டங்களை உடையவர்களாக ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் இருந்தார்கள். பெய்ருஹா என்ற பெயரிலுள்ள ஒரு தோட்டம் அவர்களுக்கு மிகவும் விருப்பமான தோட்டமாக இருந்தது. இது மஸ்ஜிது நபவிக்கு நேர் எதிரில் இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் அந்த தோட்டத்திற்குச் செல்வார்கள். அந்த தோட்டத்திலிருந்த குளிர்ந்த இனிமையான தண்ணீர் அவர்களுக்கு மிகவும் விருப்பமானதாக இருந்தது. இந்த வசனம் இறங்கிய சமயத்தில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இந்த தோட்டத்தை சதகாவாக வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இந்த வசனம் இறங்கியபோது எனது

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். [16:129]**

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*நான் படைப்பினங்களின் சீர்திருத்தத்திற்காக அனுப்பப்பட்டுள்ளேன். மார்க்கத்தை பசுமையயாக உள்ளங்களில் நிலைபெறச் செய்வதற்காக நானே அனுப்பப்பட்டுள்ளேன். (ஃபத்ஹே இஸ்லாம். ரூஹானி கஸாயீன் தொகுதி 30, பக்கம் 7-9)*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**பைஅத்தின் சந்தர்ப்பத்தின் போது சில சொற்களை கிளிகளைப் போன்று மனனம் செய்து கூறி விடுவதனால் எந்த பயனும் இல்லை. மனதை தூய்மைப்படுத்துவதற்கு உரிய அறிவை பெற்றுக் கொள்ளுங்கள்.** [மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 72–73; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது]

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனுக்கு ஒரு மகனை உருவாக்குவது என்பது இறைவனின் மரணத்தின் மீது நம்பிக்கை கொள்வதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 330-331; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**இஸ்லாத்தின் ஆன்மீக வீரத்தையும், மறைமுகமான ஆற்றலின் அற்புதங்களையும் நான் காட்ட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான்.** [மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 59–60; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது]

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

*மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)*

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)*

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உலகில் ஓர் எச்சரிக்கையாளர் தோன்றினார். ஆனால் உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஒப்புக் கொள்வான். மிக கடுமையான தாக்குதல்கள் மூலமாக அவரது உண்மையை வெளிப்படுத்துவான் (ஃபத்ஹே இஸ்லாம். ரூஹானி கஸாயீன் தொகுதி 30, பக்கம் 7-9)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*நிச்சயமாக எதுவரை நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை எனது தோழமையில் இருக்க மாட்டீர்களோ அதுவரை நான் புதிய நபராக மாறி விட்டேன் என்று எவரும் கருதி விடக்கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 72-73; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*அற்புதங்களைக் காட்டக்கூடிய ஒரு கிறித்தவர் கூட நமக்கு தென்படவில்லை. தனது ஈமானை முஃமின்களுக்குரிய அடையாளங்களுடன் நிரூபணம் செய்யக்கூடிய ஒருவர் கூட இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 330-331; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**என்னைப் போன்ற எளிய மனிதனின் கைகளின் மூலமாக அவனது மார்க்கத்தின் கண்ணியம் வெளிப்பட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான்.** [மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 59–60; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது]

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவன் மறைவிலும் மறைவானவனாகவும் நுட்பத்திலும் நுட்பமானவனாகவும் (கண்களில் இருந்து) மிகவும் மறைந்தும் இருக்கின்றான். அவனை மனித அறிவுகள் தமது வலிமையால் மட்டும் கண்டுபிடித்து விட முடியாது. (ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**நீங்கள் நம்பிக்கையாளர்கள் என்றால் நன்றி செலுத்துங்கள். மேலும் நன்றி செலுத்தும் வகையில் சஜ்தாக்கள் செய்யுங்கள்.** [ஃபத்ஹே இஸ்லாம். ரூஹானி கஸாயீன் தொகுதி 30, பக்கம் 7–9]

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

**இஸ்லாத்தின் அடையாளமாக இருக்கக்கூடிய உதவி ஒத்தாசைக்கான அடையாளங்களை இஸ்லாத்தின் உண்மைத்துவத்திற்காக உலகிற்கு வெளிப்படுத்திக்காட்ட நான் வந்துள்ளேன்.** [மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 330–331; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது]

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*இஸ்லாத்தின் மூலமாக கிடைக்கின்ற ஒளியை மக்களுக்கு காட்டிக் கொடுப்பதற்காகவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 330-331; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)*

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 9 November 2017 Issue No. 45

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

செல்வத்தில் எனக்கு மிகவும் பிரியமான பொருள் எது? என்பதைப் பற்றி நான் சிந்தித்தேன். அப்போது ரோம் நாட்டைச் சார்ந்த எனது ஓர் அடிமை பெண்ணைத் தவிர வேறு எந்த எனது பொருளும் எல்லாவற்றையும் விட பிரியமானதாக எனக்கு இருக்கவில்லை. அப்போது அந்த சமயத்திலேயே நான் அந்த அடிமைப் பெண்ணை விடுதலை செய்து விட்டேன். (ஹுல்யத்தில் அவ்லியா தொகுதி 1 பக்கம் 295)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களின் சம்பவமும் ஈமானுக்கு மிகவும் எழுச்சியூட்டக்கூடிய வியக்கத்தக்க சம்பவமாக இருக்கின்றது. அது அவர்களது உண்மையான உணர்வுகளை மிகத் தெளிவாக படம் பிடித்து காட்டக்கூடியதாக இருக்கின்றது. ஒரு முறை அவர்கள் நோயுற்றிருந்தார்கள். மீன் சாப்பிடுவதற்கு அவர்களது உள்ளம் மிகவும் விரும்பியது. மக்கள் மிகவும் சிரமப்பட்டு ஒரு மீனை தேடிப் பிடித்துக் கொண்டு வந்து அதனை சமைத்து அவர்களுக்கு முன்னால் வைத்தனர். ஒரு கவளம் உணவைக் கூட அவர்கள் சாப்பிடாத நிலையில் அவர்களது வீட்டின் கதவருகில் ஓர் ஏழையின் குரல் கேட்டது. அவர்கள் உடனடியாக எழுந்து சமைத்து வைத்திருந்த அந்த மீன் முழுவதையும் அந்த ஏழைக்கு வழங்கி விட்டார்கள். மக்கள் மிகவும் பிடிவாதத்துடன் நீங்கள் மீனை சாப்பிடுங்கள். நாங்கள் அந்த ஏழைக்கு கொஞ்சம் தொகையை கொடுத்து விடுகின்றோம். அதன் மூலமாக அவர் தனது தேவையை நிறைவு செய்து கொள்வார் என்று கூறினர். ஆனால் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் இப்போது இந்த மீன்தான் எனக்கு மிகவும் விருப்பமான பொருளாக இருக்கின்றது. நான் அதைத்தான் சதகாவாக வழங்குவேன் என்று கூறி விட்டார்கள்.

(ஹுல்யத்துல் அவ்லியா தொகுதி 1 பக்கம் 297)

பாரசீகத்தைச் சார்ந்த ஹஸ்ரத் சல்மான் (ரலி) மதாயினுடைய ஆளுனராக இருந்தார்கள். அவர்களுக்கு பைத்துல் மால் மூலம் ஐந்தாயிரம் தீனார் கிடைத்தது. பைத்துல் மால் மூலம் இந்த பணம் கிடைத்ததும் முழுமையாக அதனை அவர்கள் இறை வழியில் செலவு செய்து விடுவார்கள். பாய்களைப் பின்னுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து அன்னார் தங்களது வாழ்வைக் கழித்து வந்தார்கள்.

(அல் இஸ்திஆப் தொழுதி 2 பக்கம் 572)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் ஆகியோரை விட தாராளமாக வழங்குகின்ற வேறு எவரையும் பார்த்ததில்லை. இருவரின் தியாகங்கள் செய்யும் வழிமுறையும் வெவ்வேறானதாக இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் சிறிது சிறிதாக பொருளை ஒன்று சேர்ப்பார்கள். ஓரளவு பொருள் ஒன்று சேர்ந்ததும் அவை அனைத்தையும் அவர்கள் பங்கிட்டுக் கொடுத்து விடுவார்கள். ஆனால், அஸ்மா (ரலி) அவர்களின் வழிமுறை எவ்வாறிருந்தது என்றால், அவர்கள் எந்த ஒரு பொருளையும் தங்களிடம் வைத்து கொண்டதேயில்லை.

(அல் அதபுல் மு.ஃப்ரத் பாபுஸ் ஸஹாவதி)

ஒரு முறை இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், பெண்களிடம் இறை வழியில் தியாகம் செய்வது பற்றி போதனை செய்தார்கள். அவர்கள் வீட்டிற்குத் திரும்பிச் சென்றவுடன் ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களின் மனைவி பெருமானர் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு வந்து விட்டார்கள். மேலு,ம் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்போது நான் என்னிடமிருந்த எல்லா நகைகளையும் கொண்டு வந்து விட்டேன். இறை வழியில் அவற்றை நான் அர்ப்பணிக்கின்றேன் என்று கூறினார்கள்.

இவை முன்மாதிரிக்காக கூறப்பட்ட சில உதாரணங்களாகும். உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய பார்வை இந்த சஹாபாக்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது என்றால் அவர்கள் தம்மையே அவ்வழியில் மாய்த்து விட்டனர். அவர்கள் அல்லாஹ்விற்காக தங்களை மாய்த்துக் கொள்வதிலும், அல்லாஹ்விற்காக பொருள் தியாகம் செய்வதிலும் எத்தகைய முன்மாதிரியை காட்டியுள்ளனர் என்றால் அவற்றிற்கு நிகராக வேறு எதையும் நம்மால் கூற முடியவில்லை.

*(தொடர்ச்சி வரும் இதழில்….)*

*(குத்பா தொடர்ச்சி…)*

மிகைப்படுத்தி கூறுகிறது என்று மக்கள் கருதுகிறார்கள். உலகத்தில் இவ்வளவு நாடுகளே இல்லை என்கின்றனர். ஏனென்றால் ஐக்கிய நாடுகளின் சபையின் உறுப்பு நாடுகளாக 190, 195 நாடுகளே உள்ளன என்கின்றனர். ஐக்கிய நாடுகளின் சபைகள் உறுப்பு நாடுகள் சந்தேகமின்றி அவ்வளவுதான். ஆனால் உலகில் நாடுகளின் எண்ணிக்கை ஏறக்குறைய 220 ஆகும்.

கடந்த நாட்களில் BBC ஒரு விளையாட்டு தொடர்பாக தெரிவித்தது என்னவென்றால் அந்த போட்டி உலகின் 220 நாடுகளில் பார்க்கப்படும் என்றனர். (இதற்கான ஆதாரத்தை **http/www.bbc.com/sport/boxing/ 41033008 –ல்** காணலாம்.) எனவே ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை வைத்துக் கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத் நாடுகளின் எண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுகிறது. தன் தரப்பிலிருந்து நாடுகளை உருவாக்கிக் கொண்டார்கள் என்பது சில இளைஞர்களின் சிந்தனையில் இருக்கிறது. அதை வெளியேற்றி விடுங்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக வழங்கி இருக்கக்கூடிய தூதுச் செய்தியை உலகில் சென்றடையச் செய்வதற்கான நல்வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)

**என்பத்தி ஒன்பதாவது அடையாளம்:** நான் செய்யது அஹ்மது கான் தொடர்பாக அவரது வாழ்நாளின் இறுதியில், அவருக்கு சில துன்பங்கள் ஏற்படும். அவரது வாழ்நாளில் குறைவான நாட்களே எஞ்சியுள்ளன என்று முன்னறிவிப்பு செய்திருந்தேன். இந்த விஷயத்தை பிரசுரங்களிலும் நான் வெளியிட்டிருந்தேன். அதற்கு பிறகு தீங்கு விளைவிக்கின்ற இந்து ஒருவர் அவரது செல்வத்தை அபகரித்துக் கொண்டதன் காரணமாக செய்யது அவர்களுக்கு தமது வாழ்நாளின் இறுதி நாட்களில் மிகுந்த துக்கத்தையும் துயரத்தையும் தாங்கிக் கொள்ள வேண்டியது வந்தது. அதற்கு பிறகு சிறிது நாட்கள் வரைதான் அவர் உயிரோடு இருந்தார். இந்த துக்கத்தாலும் துயரத்தாலும் அவர் மரணித்து விட்டார்.

**தொன்னூறாவது அடையாளம்:** ஒரு முறை தபால் துறையின் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதாக என் மீது வழக்கு தொடரப்பட்டது. அதற்கான தண்டனை *500* ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாத கால சிறைவாசமாக இருந்தது. வெளிப்படையாகப் பார்க்கும்போது விடுதலைக்கான எந்தவொரு வழியும் தெரியாமல் இருந்தது. அதற்காக நான் துஆ செய்த பிறகு கனவில் இறைவன் அந்த வழக்கு தள்ளுபடியாகி விடும் என்பதை எனக்கு வெளிப்படுத்திக் காட்டினான். இந்த வழக்கு தொடர்பான செய்தியை தெரிவித்தவர் ரில்யாராம் என்ற பெயரை உடைய ஒரு கிறித்தவர் ஆவார். அவர் அமிர்தசரஸில் வழக்கறிஞராக இருந்து வந்தார். நான் கனவில் அவர் என் பக்கம் ஒரு பாம்பை அனுப்பி இருப்பதைப் பார்த்தேன். நான் அந்த பாம்பை மீனைப் போன்று பொரித்து அவருக்கு திரும்ப அனுப்பி வைக்கின்றேன். அவர் வழக்கறிஞராக இருந்ததால் எனது இந்த வழக்கு ஒரு வகையில் அவருக்கு மிகவும் பயன்தரக் கூடியதாக இருந்தது. பொரித்த மீனைப் போன்று அவருக்கு பயனுள்ளதாக இருந்தது. பிறகு, அந்த வழக்கு முதன் முறையாக விசாரணைக்கு வந்தபோதே தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 248)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad